உலகளாவிய அழிவு குறித்து ஹுஸூர் அன்வர் அவர்களின் எச்சரிக்கை, வேதனை மிகுந்த துஆக்கள்.... பக்கம் 3

18-வது தேசிய அமைதிக் கருத்தரங்கு - யு.கே. பக்கம் 9

லைலத்துல் கத்ரின் உண்மைநிலை பக்கம் 15

உலக சாதனைகளும் மகிழ்ச்சிகளும் நிரந்தரமானவை அல்ல! பக்கம் 20



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | March 2024 | Vol. 3 - Issue No. 4



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311






# திருக்குர்ஆன்

شَهْرُ رَمَضَانَ الَّذِىٓ اُنْزِلَ فِيْهِ الْقُرْاٰنُ
هُدًى لِّلنَّاسِ وَبَيِّنٰتٍ مِّنَ الْهُدٰى
وَالْفُرْقَانِ ۚ فَمَنْ شَهِدَ مِنْكُمُ الشَّهْرَ
فَلْيَصُمْهُ ۗ وَمَنْ كَانَ مَرِيْضًا اَوْ عَلٰى سَفَرٍ
فَعِدَّةٌ مِّنْ اَيَّامٍ اُخَرَ ۗ يُرِيْدُ اللّٰهُ بِكُمُ
الْيُسْرَ وَلَا يُرِيْدُ بِكُمُ الْعُسْرَ
وَلِتُكْمِلُوا الْعِدَّةَ وَلِتُكَبِّرُوا اللّٰهَ عَلٰى مَا
هَدٰىكُمْ وَلَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

ரமலான் மாதம் குறித்து திருக்குர்ஆன் இறக்கப்பட்டுள்ளது. (அந்த குர்ஆன்) எல்லா மனிதர்களுக்கும் நேர்வழி காட்டக் கூடியதாக (அனுப்பப்பட்டு) உள்ளது. அது தெளிவான சான்று –களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்தச் சான்றுகள் நேர்வழியினை உருவாக்குகின்றன. மேலும் அத்துடன் (திருக் குர்ஆனில்) இறை அடையாளங்களும் உள்ளன. எனவே உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். ஆனால் நோயாளியாகவோ பயணத்திலோ இருப்பவர் (விட்டுப்போன நோன்பை) மற்ற நாட்களில் கணக்கிட்டு (நோற்று)க் கொள்ள வேண்டும். அல்லாஹ் உங்களுக்கு எளிதை விரும்புகிறான். உங்களுக்குக் கடினத்தை விரும்புவதில்லை. நீங்கள் எண்ணிக்கையை முழுமை செய்வதற்காகவும், அல்லாஹ் உங்களுக்கு நேர்வழி காட்டியதற்காக நீங்கள் அவனின் பெருமையை எடுத்துரைப்பதற்காகவும், நீங்கள் அவனுக்கு நன்றி செலுத்துவற்காகவுமே (இந்தக் கட்டளையை அவன் பிறப்பித்துள்ளான்). (2:186)



# ஹதீஸ்

عَنْ أَبِي هُرَيْرَةَ قَالَ لَمَّا حَضَرَ رَمَضَانُ
قَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ
قَدْ جَاءَكُمْ رَمَضَانُ شَهْرٌ مُبَارَكٌ افْتَرَضَ اللهُ عَلَيْكُمْ
صِيَامَهُ تُفْتَحُ فِيهِ أَبْوَابُ الْجَنَّةِ وَتُغْلَقُ فِيهِ
أَبْوَابُ الْجَحِيمِ وَتُغَلُّ فِيهِ الشَّيَاطِينُ فِيهِ لَيْلَةٌ خَيْرٌ
مِنْ أَلْفِ شَهْرٍ مَنْ حُرِمَ خَيْرَهَا قَدْ حُرِمَ
مسند أحمد بن حنبل 7148

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘அருளுக்குரிய ரமலான் மாதம் உங்களிடையே வந்துள்ளது. அதில் நோன்பு நோற்குமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். அதில் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் மூடப்படுகின்றன. ஷெய்த்தான்கள் விலங்கிடப் –படுகின்றனர். அந்த மாதத்தில் ஓர் இரவு வருகிறது. அது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும். எனவே எவர் இதன் நன்மையிலிருந்து விலகியிருப்பாரோ அவர் நற்பேறு அற்றவர் ஆவார்.’’ (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல், ஹதீஸ் எண். 7148)

# உலகளாவிய அழிவு குறித்து ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் எச்சரிக்கை, வேதனை மிகுந்த துஆக்கள் மற்றும் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பொறுப்புகள்

மவ்லவி K. தாரிக் அஹ்மது சாஹிப் (அடிஷனல் நாஸிர் இஸ்லாஹ்-வ-இர்ஷாது நூருல் இஸ்லாம், காதியான்)

தமிழாக்கம்: இப்னு வஸீம்

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

يَٰٓأَهۡلَ ٱلۡكِتَٰبِ قَدۡ جَآءَكُمۡ رَسُولُنَا يُبَيِّنُ لَكُمۡ عَلَىٰ فَتۡرَةٍ مِّنَ ٱلرُّسُلِ
أَن تَقُولُواْ مَا جَآءَنَا مِنۢ بَشِيرٍ وَلَا نَذِيرٍ فَقَدۡ جَآءَكُم
بَشِيرٌ وَنَذِيرٌ وَٱللَّهُ عَلَىٰ كُلِّ شَيۡءٍ قَدِيرٌ

வேதத்தையுடையவர்களே! தூதர்களின் வருகைத் தொடரில் ஏற்பட்ட ஒரு நீண்ட இடைவெளிக்குப் பிறகு, நிச்சயமாக உங்களிடம் நம் தூதர் வந்துள்ளார். அவர், நீங்கள் எங்களிடம் எந்தவொரு நற்செய்தி கூறுபவரோ எச்சரிப்பவரோ வரவில்லை என்று கூறாதிருக்கும் பொருட்டு (முக்கியமான விஷயங்களை) உங்களுக்கு விளக்கிக் கூறுகிறார். எனவே, நிச்சயமாக நற்செய்தி கூறுபவரும் அச்சமூட்டி எச்சரிப்பவருமாகிய ஒருவர் உங்களிடம் வந்து விட்டார். மேலும் அல்லாஹ், தான் நாடும் அனைத்தையும் செய்வதற்கு நிரந்தரமான ஆற்றல் பெற்றவனாவான். (5:20)

சய்யிதுனா ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“பாருங்கள்! இன்று நான் கூறி விட்டேன். பூமியும் கேட்கிறது; வானமும் கேட்கிறது. அதாவது, உண்மையை விட்டு விட்டு தீமைகளைச் செய்ய இணங்கும் ஒவ்வொருவரும், பூமியைத் தன்னுடைய தீமைகளால் அசுத்தப்படுத்தும் ஒவ்வொருவரும் பிடிக்கப்படுவார். இறைவன் கூறுகிறான்: என்னுடைய தண்டனை பூமியில் இறங்கும் நேரம் அண்மையில் இருக்கிறது. ஏனென்றால், பூமி பாவங்களாலும் குற்றங்களாலும் நிறைந்து விட்டது.

எனவே, எழுந்திருங்கள்! விழிப்புணர்வு கொள்ளுங்கள்! ஏனென்றால், முந்தைய நபிமார்களும் முன்னறிவித்திருந்த அந்த இறுதி நேரம் நெருங்கி விட்டது. நான் என்னை அனுப்பிய அவன் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்! இந்த எல்லா விஷயங்களும் அவன் தரப்பிலிருந்து உள்ளன; என் தரப்பிலிருந்து இல்லை. இந்த விஷயங்கள் நல்லெண்ணத் -துடன் பார்க்கப்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! நான் அவர்களுடைய பார்வையில் பொய்யனாக இல்லாமல் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அவ்வாறு உலகம் அழிவிலிருந்து தப்பியிருக்கும்!

என்னுடைய இந்த எழுத்துகள் சாதாரண எழுத்துகள் அல்ல. இவை உள்ளத்து அனுதாபத்தினால் நிறைந்துள்ள முழக்கங்கள் ஆகும். உங்களுக்குள் மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வீர்களாயின், ஒவ்வொரு தீமையை விட்டும் உங்களைக் காப்பாற்றிக் கொள்வீர்களாயின் தப்பித்துக் கொள்வீர்கள். ஏனெனில், இறைவன் தண்டனையை இறக்குபவனாக இருப்பது போன்று அவன் சகித்துக் கொள்பவனும் ஆவான்.

உங்களில் ஒரு சதவீதத்தினராவது சீர்திருத்தம் பெற்றவராக இருந்தால், அப்பொழுதும் கருணை புரியப்படும். இல்லையென்றால், மனிதர்களைப் பித்துப் பிடித்தவர்களாக ஆக்கும் அந்த நாள் வருகிறது. பேறிழந்த, அறிவீனன் இந்த விஷயங்கள் பொய்யானவையாகும் என்று கூறுவான். அந்தோ! அவன் ஏன் இந்த அளவுக்கு உறங்குகிறான்? சூரியனோ உதிக்கவிருக்கிறது. தீமைகளையும், ஒழுக்கக்கேடுகளையும் விட்டு விடுவதில் மனிதனுக்கு என்ன பிரச்சனை? அவன் படைப்பினங்களை வணங்கவில்லை என்றால், இதில் அவனுக்கு என்ன இழப்பு இருக்கிறது?



நெருப்பு பற்றி எரிய ஆரம்பித்து விட்டது. எழுந்திருங்கள்! உங்கள் கண்ணீரால் அந்த நெருப்பை அணைத்திடுங்கள். மரணித்து விடும் அளவுக்குத் தவ்பா மற்றும் இஸ்தி.ஃக்.ஃபார் செய்யுங்கள். இவ்வாறு சகித்துக் கொள்ளக்கூடிய அந்த இறைவன் உங்கள் மீது கருணை புரிவான். ஆமீன்.”

(இஷ்திஹாருல் இன்ஸார் காதியான் வெளியீடு) - மஜ்மூஆ இஷ்திஹாராத், தொகுதி 3, இலண்டன் வெளியீடு, பக்கம் 522, 524)

கருணை புரியப்படும் பொருட்டு தவ்பா செய்திடுங்கள்.

உண்மையையும் இறைவன் பக்கம் குனிவதையும்
விரைவாக காட்டிடுங்கள்.

எப்படிப்பட்ட ஒரு நேரம் தலை மீது நிற்கிறது என்றால்,
அதன் மூலம் கியாமத் நினைவுக்கு வந்து விடும்.

எனக்கு இதை (என்) எஜமானன் கூறி விட்டான்.

என்னுடைய எதிரிகளை இழிவடையச் செய்த
(என் இறை)வன் தூயவன் ஆவான்.

தற்காலத்தின் நற்செய்தி கூறுபவரும், எச்சரிப்பாளருமான காலத்தின் மஸீஹ் மற்றும் மஹ்தி அவர்களின் மெய்சிலிர்க்க வைக்கும் எச்சரிக்கையை நீங்கள் செவியேற்று விட்டீர்கள். இன்று உலகத்தில், ஒரு நம்பிக்கையின்மை மற்றும் அச்சம் நிறைந்த சூழல் உள்ளது. போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன. மனித இனத்திற்கு இப்பொழுது இதர உலகத் தேவைகளுடன் சேர்த்து, அமைதி, சமாதானம் மற்றும் நிம்மதிக்கான தேவை எந்த அளவு இருக்கிறது என்றால், இந்த அளவுக்கு இதற்கு முன்னர் ஒருபோதும் இருந்திருக்காது.

இரண்டு உலகப் போர்களாலும், கோடிக்கணக்கான மக்களின் இரத்தத்தாலும் கூட உலக ஆற்றல்களுக்கு அமைதியின் முக்கியத்துவத்தை நம்ப வைக்க முடியவில்லை. மூன்றாம் உலகப் போருக்கான ஆபத்துகள் உருவாகி விட்டன. இந்த சூழ்நிலையில் பொது அமைதிக்காக முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பதிலாக, உலகத்தில் ஆயுதங்களையும் போரையும் வழக்கப்படுத்துவதற்கான வேலை நடக்கிறது.

கடந்த பத்தாண்டுகளின் எண்ணிக்கை மட்டுமே கணக்கெடுக்கப்பட்டால், ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான அப்பாவிகளும், குற்றமற்றவர்களும் இரையானார்கள். எண்ணற்றவர்கள் காயமுற்று என்றென்றைக்கும் இயலாதவர்கள் ஆகி விட்டார்கள். இலட்சக்கணக்கானவர்கள் வீடுகளை இழந்து விட்டனர். அவர்களுடைய துன்பங்களுக்கு இன்று வரை மருந்து கிடைக்கவில்லை. உலகின் பெரும் ஆற்றல்களிடம் இதைப் பற்றிய எந்த உணர்தலும் இல்லையே என்பதே வருத்தமான விஷயம்!

இந்தக் கண்ணோட்டத்தில் உலகில் மனித குலத்தின் மீது அனுதாபம் காட்டக்கூடிய, அதற்குத் தன்னலமின்றி தொண்டாற்றக்கூடிய மற்றும் அதற்காக துஆக்களை செய்யக் கூடிய ஒரு தூயவர் இருக்கிறார். அவர்கள்தான் காலத்தின் கலீ∴பா ஆவார்கள்.

எழுந்திருங்கள்! அந்தப் பொழுது வந்து விட்டது.

நேரம் சென்று கொண்டிருக்கிறது.

மஸீஹின் மகன் எப்பொழுதிலிருந்து

எழுப்பிக் கொண்டிருக்கிறார் என்று பாருங்கள்!

கண்ணியத்திற்குரியோரே! உலக நெருக்கடியின் இந்தத் துன்பம் தரும் நேரங்களில் அல்லாஹ்வின் கருணையும், பரிவும் நம் மீது உண்மையான அஹ்மதிய்யா கிலா∴பத் எனும் வடிவில் நிழலிட்டுள்ளது. அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்:

وَلَيُمَكِّنَنَّ لَهُمْ دِيْنَهُمُ الَّذِى ارْتَضٰى لَهُمْ
وَلَيُبَدِّلَنَّهُمْ مِّنْۢ بَعْدِ خَوْفِهِمْ اَمْنًا

பொருள்: அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை நிச்சயமாக அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு, அதற்குப் பதிலாக நிச்சயமாக அமைதியினை வழங்குவதாகவும் வாக்குறுதி அளித்துள்ளான். (24:56)

அல்லாஹ்வின் இந்த வாக்குறுதி தனது முழுப் பொலிவுடன் நிறைவேறுவதை அஹ்மதிகளாகிய நாம் எல்லா நேரமும் எத்திசையிலும் பார்க்கிறோம். அவனாலேயே எல்லா சிரமங்களும் எளிமையாகி விடுகின்றன அவனை விட்டு முகந்திருப்புபவன் அறிவீனன் ஆவான்.

கண்ணியத்திற்குரியோரே! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: நம்பிக்கை கொண்டவரின் கவனத்திற்கு அஞ்சுங்கள். ஏனென்றால், அவர் அல்லாஹ்வால் வழங்கப்பட்ட ஒளியால் பார்க்கிறார். நம்பிக்கை கொண்ட ஓர் அறிஞரின் தன்மை இதுவென்றால், ஹஸ்ரத் அமீருல் மு∴மினீன் அவர்களின் மேன்மை எந்த அளவுக்கு இருக்கும்!




இன்றிலிருந்து 15 ஆண்டுகளுக்கு முன்பு முழு உலகமும் கவனமற்று உறங்கிக் கொண்டிருந்தது. அப்பொழுது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இந்த ஆபத்துகளைப் பற்றி உலகத்திற்கு எச்சரிக்கை விடுக்கிறார்கள். وَكُنْتُمْ عَلٰى شَفَا حُفْرَةٍ مِّنَ النَّارِ (வகுன்த்தும் அலா ஷ∴பா ஹு∴ப்ரத்திம் மினன்னார்) அதாவது, நீங்கள் ஒரு நெருப்புக் கிடங்கின் ஓரத்தில் நிற்கிறீர்கள். فَاَنْقَذَكُمْ مِّنْهَا (∴பஅன்கஸக்கும் மின்ஹா) அதாவது, அந்த நெருப்பில் விழுவதிலிருந்தும் உங்களைக் காப்பாற்றும் இந்த முயற்சியில் (அன்னார்) மிகவும் வேதனை மிகுந்த உள்ளத்துடன் ஈடுபட்டுள்ளார்கள். (திருக்குர்ஆன் 3:104)

இன்று உலகத்தில் பொது அமைதிக்காக எந்த அளவு முயற்சிகளை அஹ்மதிய்யா கிலா∴பத் செய்துள்ளதோ அது போன்ற எந்த முன்னுதாரணமும் இல்லை. நம்முடைய அன்பிற்குரிய இமாம் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மட்டுமே உலகை மூன்றாம் உலகப் போர் குறித்து, ஒரு நீண்ட காலமாக எச்சரித்து வருகிறார்கள்; விழிப்புணர்வூட்டி வருகிறார்கள். இன்னும் சொல்வதாயின், உலகத்தை இந்த பயங்கரமான அழிவிலிருந்து காப்பாற்றுவதற்காக வேதனை மிகுந்த அறிவுரைகளையும் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.

அமைதி, சமரசம் மற்றும் சமாதானம் ஆகியவற்றிக்காக முயற்சி செய்யக் கூடியவர் ஒரேயோர் உலகளாவிய வழிகாட்டிதான் இருக்கிறார். நாம் அவரை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருப்பது நமது நற்பேறாகும். ஆனால், எவர்கள் அவரை ஏற்றுக் கொள்வதில்லையோ அவர் அவர்களுக்காகவும் இதே போன்று வேதனை கொண்டிருக்கிறார்; துஆக்கள் செய்கிறார்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

"போர் நிலைமைகள் எந்த அளவு வேகமாக கடுமையாகின்றனவோ, இஸ்ரேல் அரசும் வல்லரசுகளும் எந்தத் திட்டத்தின்படி செயல்படுகின்றனவோ அதனால் உலகப் போர் இப்பொழுது கண்ணுக்கு முன்னால் தென்படுகிறது. சில இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் ரஷ்யா, சீனா மற்றும் சில மேற்கத்திய ஆய்வாளர்களும், 'இந்தப் போரின் வட்டம் இப்பொழுது விரிவடைந்து கொண்டே செல்வதாகத் தெரிகிறது. உடனடியாக போர் நிறுத்த திட்டம் மேற்கொள்ளப்படவில்லை என்றால், உலகம் அழிந்து விடும்' என்று இப்பொழுது வெளிப்படையாகக் கூறவும், எழுதவும் ஆரம்பித்து விட்டார்கள்.

அனைத்தும் செய்திகளில் வருகிறது. முழு சூழ்நிலையும் உங்கள் அனைவருக்கும் முன்னால் உள்ளது. எனவே, அஹ்மதிகள் துஆக்களின் பக்கம் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். ஒவ்வொரு தொழுகையிலும் ஒரு சஜ்தா அல்லது குறைந்தபட்சம் ஏதாவது ஒரு தொழுகையில் ஒரு சஜ்தாவைக் கண்டிப்பாக இதற்காக செய்ய வேண்டும். அதில் துஆ செய்ய வேண்டும்." (ஜுமுஆ பேருரை 27 அக்டோபர், 2023)

உலகத்தில் அமைதியை நிலைநாட்டுவதற்காக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களால் செய்யப்பட்ட முயற்சிகளில் ஒரு பெரும் பங்கு அன்னார் பல்வேறு நாடுகளுக்கு மேற்கொண்ட பயணங்கள் ஆகும்.



இந்தச் சுற்றுப் பயணங்களில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் நாடுகளின் தலைவர் -களுடனான சந்திப்புகள் மூலமாகவும், அரசாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆலோசகர்கள், மேயர்கள், மருத்துவர்கள், பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் வாழ்வின் பல்வேறு துறைகளைச் சார்ந்த கண்ணியத்திற்குரிய மக்களுடனான சந்திப்புகளின் மூலமாகவும் இஸ்லாமிய போதனைக்கு ஏற்ப அமைதியின் செய்தியை எட்ட வைத்தார்கள். உலகின் தற்போதைய சூழ்நிலை, உலகப் பொருளாதாரம், சுற்றுச் சூழல் மாசுபாடு, தீவிரவாதத்தைத் தடுத்து நிறுத்துதல் மற்றும் உலகளாவிய அமைதியை நிலைநாட்டுதல் போன்ற தலைப்புகளில் விவாதித்துள்ளார்கள்.

ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் இந்த அறிவுரை நிறைந்த மற்றும் சிந்திக்கத் தூண்டும் சொற்பொழிவுகளிலிருந்து நேரத்தைக் கருத்தில் கொண்டு இரண்டு மேற்கோள்களை மட்டும் முன் வைக்கிறேன். அவற்றில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வேதனை மிகுந்த அறிவுரைகளைக் கூறியுள்ளார்கள்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

நாம் இதையும் நினைவில் கொள்ள வேண்டும்! மனித முயற்சிகள் தோல்வியடைந்து விடும்போது, அந்த வல்லமை மிக்க இறைவன் தனது தீர்ப்பை வெளிப்படுத்துவதற்காகவும், மக்கள்தன் பக்கம் வருவதற்கும், மனித குலத்திற்குத் தொண்டாற்றுவதற்கும் அவர்களை நிர்பந்திப்பதற்காகவும் மனித குலத்தின் விதிகளைத் தீர்மானிப்பதைத் தன்னுடைய கைகளில் எடுத்துக் கொள்கிறான்.

உலக மக்கள் தாமாகவே இந்த முக்கியமான விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்துவது மிகச் சிறந்ததாகும். ஏனென்றால், அல்லாஹ்வை இப்படியொரு நடவடிக்கை எடுக்குமாறு நிர்பந்திக்கும் போது, அவனது கோபம் மனிதனை மிகவும் அச்சுறுத்தக்கூடிய கொடுக்கினால் பிடிக்கிறது. இவ்வாறு இந்த அச்சுறுத்தும் பிடி, மற்றோர் உலகப் போர் வடிவில் வெளிப்படாலம். வரவிருக்கின்ற உலகப் போரின் விளைவுகளும், அதன் பரந்துபட்ட அழிவுகளும் அந்தப் போர் வரை மட்டுமே அல்லது தற்போதைய சந்ததிகள் வரை மட்டுமே நீடிக்கும் என்பது கிடையாது.

அதன் பயங்கரமான விளைவுகள் வரப்போகும் பல தலைமுறைகளைப் பாதித்துக் கொண்டே இருக்கும். பிறகு, இத்தகைய போரின் பயங்கரமான விளைவுகள் மற்றும் அதன் பாதிப்புகள் புதிதாகப் பிறக்கும் குழந்தைகள் மற்றும் எதிர்காலத்தில் பிறக்கப் போகும் குழந்தைகள் மீதும் ஏற்படும். தற்போதைய நவீன ஆயுதங்கள் எந்த அளவுக்கு அழிவை ஏற்படுத்தக்கூடியவை என்றால், எதிர்காலத்தில் பிறக்கும் பல சந்ததிகளின் உடல்களின் மீது அவற்றின் பயங்கரமான விளைவு ஏற்படும்.

ஒரு மனிதர் துப்பாக்கியால் சுடப்பட்டால், அவர் உயிர் தப்புவதற்கான சாத்தியமுள்ளது தான். ஆனால், அணு ஆயுதப் போர் துவங்கி விட்டால், அதன் தாக்குதலுக்கு ஆளாகுபவர்கள் எவர்களாக இருந்தாலும் சரி அவர்களுக்கு இந்த நற்பேறு இருக்காது. அதற்கு நேர் மாறாக, நாம் என்ன பார்ப்போம் என்றால், மக்கள் தீடீரென்று மரணிக்க ஆரம்பிப்பார்கள். ஓரிடத்தில் உறைந்து போய் விடுவார்கள். அவர்களின் தோல்கள் உருக ஆரம்பித்து விடும். குடிநீர், உணவுப் பொருள், காய்கறிகள் என அனைத்தும் நச்சுத்தன்மை கொண்டவையாக ஆகி விடும்.

எந்த இடங்களில் நேரடியாக போர்கள் நடைபெறாதோ அங்கும், மேலும், எங்கு போரின் பாதிப்புகள் தாக்கங்கள்

குறைவாக இருக்குமோ அங்கும் அணு ஆயுதத்தால் ஏற்படும் நோய்களின் மோசமான விளைவுகள் உருவாகும். மேலும், வருங்கால சந்ததிகளுக்குப் பல்வேறு வகையான ஆபத்துகளைக் கடந்து செல்ல நேரிடும். இவ்வாறிருந்தும் இன்று அறிவற்ற சுயநலவாதிகள் சிலர் தங்களுடைய கண்டுபிடிப்புகள் குறித்து மிகவும் பெருமைபடுகின்றனர். அவர்கள் உலகின் அழிவுச் செயலுக்காக எதை உருவாக்கி -யுள்ளார்களோ அதை உலகத்திற்குத் தரும் அன்பளிப்பாக முன் வைக்கின்றனர்.



ஒரு கணிப்புப்படி, இரண்டாம் உலகப் போரில் 6 கோடியே 20 இலட்சம் பேர் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்ட மக்களில் 4 கோடி பேர் பொதுமக்கள் ஆவர் எனக் கூறப்படுகிறது. இதிலிருந்து தெரிய வருவதாவது, இராணுவத்தைக் காட்டிலும் பொதுமக்கள் அதிகம் கொல்லப்படுகின்றார்கள். ஜப்பானைத் தவிர மற்ற இடங்களி -லெல்லாம் வெறும் சாதாரண ஆயுதங்களைக் கொண்டு செய்யப்பட்ட அழிவுதான் இந்த அளவு ஏற்பட்டுள்ளது. இந்தப் போரில் இந்தியாவில் மட்டும் 16 இலட்சம் பேர் மரணத்துக்கு இரையாயினர்.

எனவே, வல்லரசுகள் நீதியுடன் செயல்படாவிட்டால், சிறிய நாடுகளின் நம்பிக்கையின்மையை முடிவுக்குக் கொண்டு வரவில்லை என்றால், இந்தக் கோணத்தில் சரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், நிலைமை கட்டுப்பாட்டை மீறிச் சென்று விடும். அதற்குப் பிறகு ஏற்படும் அழிவு, நாசத்தைப் பற்றி நாம் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது.

எனவே, உலக நாடுகள் தற்போதைய இந்த நிலைமைகளைக் குறித்து மிகவும் கவலை கொள்ள வேண்டும். இவ்வாறே, என்ன ஆனாலும் சரி, தங்களுடைய ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டுள்ள, சில முஸ்லிம் நாடுகளின் நீதியற்ற அரசர்களும் சுயநினைவுக்கு வர வேண்டும். இல்லையெனில், அவர்களுடைய தீய செயல்களும், அவர்களுடைய முட்டாள்தனமுமே அவர்களது தீய முடிவுக்குக் காரணமாகி விடும்.

அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களான நாங்கள் உலகையும் மனித குலத்தையும் அழிவுகளிலிருந்து காப்பாற்ற, எங்களால் இயன்ற முயற்சிகள் அனைத்தையும் செய்து கொண்டே இருப்போம். ஏனெனில், நாங்கள் இந்தக் காலத்தின் இமாமை ஏற்றுக் கொண்டுள்ளோம். அவர்களை அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆக ஆக்கி அனுப்பியுள்ளான். அவர்கள் இறைத்தூதர் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் தொண்டராக இருந்தார்கள். அவர்கள் உலகின் நன்மைக்காக தோற்றுவிக்கப்பட்டிருந்தார்கள். (மாடர்ன் பைத்துல் ஃபுதூஹ் பள்ளி -வாயிலில், மார்ச் 24, 2012 அன்று நடைபெற்ற ஒன்பதாவது அமைதிக் கருத்தரங்கில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்) (சான்று நூல்: World Crisis and Pathway to Peace பக்கம் 40-45)

கண்ணியத்திற்குரியோரே! உலகின் அழிவு, நாசம் பற்றிய எச்சரிக்கை வடிவிலான முன்னறிவிப்புகள் இருக்கின்ற அதே வேளையில், உள்ளத்திற்கு நிம்மதியும் திருப்தியும் அளிக்கக்கூடிய நற்செய்தி வடிவிலான சில முன்னறிவிப்புகளும் இருக்கின்றன. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“இந்த அடையாளங்களுக்குப் பிறகு, உலகில் ஒரு மாற்றம் ஏற்படும். பெரும்பாலான உள்ளங்கள் இறைவன் பக்கம் ஈர்க்கப்படும். பெரும்பாலான நற்பேறு பெற்ற உள்ளங்களில் உலகின் மீதான நேசம் தணிந்து விடும். கவனக்குறைவு எனும் திரைகள் இடையிலிருந்து அகற்றப்படும். மேலும், அவர்களுக்கு உண்மையான இஸ்லாத்தின் பானம் அருந்தக் கொடுக்கப்படும்.” (தஜல்லியாத்தே இலாஹிய்யா பக்கம் 6,7 1906 வெளியீடு - ரூஹானி கஸாயின் தொகுதி 20, பக்கம் 399)

கண்ணியத்திற்குரியோரே! ஜனவரி 22, 2017 அன்று நடைபெற்ற யூ.கே. வக்ஃபே நவ் வகுப்பில் ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களிடம், ‘ஹுஸூர் தங்களுடைய மிகப் பெரிய அச்சம் எது?’ என்று கேட்கப்பட்டது. ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் அதற்கு இவ்வாறு பதிலுரைத்தார்கள்:

“எனக்கு எதை நினைத்து அச்சம் இருக்கிறது என்றால், மூன்றாம் உலகப் போருக்குப் பிறகு மக்கள் இறைவனைத் தேடும்போது, மார்க்கத்தின் பக்கம் திரும்புவார்கள். அஹ்மதிகளான நமக்கு இந்த அளவுக்குப் பயிற்சி கிடைத்து விட்டதா? அல்லாஹ்வுடன் நமக்குத் தொடர்பு ஏற்பட்டு விட்டதா? நாம் அனைவரும் தொழுகையை சரியான நேரத்தில் ஐவேளை தொழுகிறோமா? மூன்றாம் உலகப் போருக்குப் பிறகு மக்கள் நம் பக்கம் திரும்பும் போது, ஒரு திருப்பு முனை ஏற்படும் போது, அவர்களை அல்லாஹ்வுடன் இணைப்பதற்கு நாம் ஆயத்தமாக உள்ளோமா? நம்முடைய அமல்கள் அவர்களுக்கு முன்மாதிரியாகக் கூடியவையாக இருக்கின்றனவா? நாம் வரக்கூடியவர்களுக்கு மார்க்கத்தின் சரியான வழியைக் காட்டும் அளவுக்கு நமது மார்க்க அறிவு இருக்கிறதா? இதுவே எனது அச்சமாகும்.”

தற்காலத்தில் உலகத்தை அமைதியின் பக்கம் அழைப்பதற்கான மிகப் பெரும் பொறுப்பு ஜமாஅத் மக்களின் தோள் மீது வைக்கப்பட்டுள்ளது. ஏனெனில், இந்தக் காலத்தில் ஜமாஅத் மக்களைத் தவிர வேறு எவருக்கும் உலகின் கவனத்தை, உயிருள்ள ஓரிறைவன் பக்கம் ஈர்ப்பதற்கான நல்வாய்ப்பு கிடைப்பதே இல்லை. இந்த அடிப்படையில், உலகம் தனது உண்மையான படைப்பாளன் பக்கம் திரும்பும்

பொருட்டு உலகிற்கு கவனமூட்டும் இந்த விஷயம் ஜமாஅத் மக்களின் மிகப் பெரும் பொறுப்பாகும்.

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களுக்கு இது ஒரு மிகப் பெரிய பணி ஆகும். அவர்கள் தம்முடைய வீடுகளிலும், தமது சுற்றுச்சூழலிலும் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க வேண்டும். உலகிலும் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்க வேண்டும். நம்முடைய உள்ளங்களும் கலப்பற்ற ஓரிறைக் கொள்கையால் நிறைந்திருக்கும் போதுதான், உலகத்தையும் நாம் உண்மையான ஓரிறைக் கொள்கையின் பால் கொண்டு வரும் போதுதான் இந்தப் பணி நடைபெறும்.

முழுமையான ஓரிறைக் கொள்கையை நிலைநாட்டாமல் அமைதி நிலைபெறவே முடியாது என்பது உறுதியான விஷயம் ஆகும். எல்லாருக்கும் மேல் ஒருவன் இருக்கிறான் என்பதை எந்நிலையிலும் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்பது முன்னரும் கூறப்பட்டு விட்டது. அந்த மேலானவன் எல்லாம் வல்ல அல்லாஹ் ஆவான். ஓரிறைக் கொள்கையை உள்ளத்தில் நிலைநாட்டாமல் அந்த சிந்தனை ஏற்பட முடியாது. ஓரிறைக் கொள்கை உருவாகாத போது, போர்களும் தொடர்ந்து கொண்டே இருக்கும். உண்மையான சகோதரத்துவம் ஏற்படும் போதுதான், ஒருவர் மற்றவருடன் அன்பு நேசம் உருவாகும் போதுதான், சகோதரத்துவமான சூழல் உருவாகும் போதுதான் போர்கள் நிற்க முடியும்.

(ஆகஸ்டு 21, 2022 அன்று ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவிலிருந்து)




சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

"அல்லாஹ்வால் இந்தக் காலத்திற்கு அனுப்பப்பட்ட தூதர் (இது பற்றி) மிகவும் அழுத்தமாக இவ்வாறு எச்சரித்துள்ளார்கள். ஐரோப்பாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. ஆசியாவே! நீயும் பாதுகாப்பாக இல்லை. தீவுகளில் வாழ்பவர்களே! எந்த செயற்கை இறைவனும் உங்களுக்கு உதவமாட்டான். நான் நகரங்கள் வீழ்வதைக் காண்கிறேன். குடியிருப்புகள் பாழடைந்து போவதைப் பார்க்கிறேன்." (நூல்: ஹகீகத்துல் வஹீ. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 269)

இதுவே அந்த வழிகாட்டலாகும் எச்சரிக்கை ஆகும்; Warning ஆகும். இதன் காரணமாகவே, அஹ்மதிய்யத்தின் கலீஃபாக்கள் அவ்வப்போது கவனமூட்டி வந்துள்ளார்கள். நானும் ஒரு நீண்ட காலமாக இதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டிருக்கிறேன். உங்களைப் படைத்த, ஒருவனான, இணையற்றவனான அந்த இறைவன் பக்கம் திரும்பவில்லை என்றால் அழிவு நிச்சயம் என்று கூறிக் கொண்டிருக்கிறேன். (ஆகஸ்டு 21, 2022 அன்று ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவிலிருந்து)

இது நெருப்பாகும்! ஆயினும், அதிசயங்களைச் செய்து காட்டும் இறைவன் மீது நேசம் கொண்டிருப்போர் அனைவரும் (இந்த) நெருப்பிலிருந்து காப்பாற்றப்படுவர்.

கண்ணியத்திற்குரியோரே! உலகம் நெருப்பின் விளிம்பில் நின்று கொண்டிருக்கக்கூடிய இப்படிப்பட்ட ஒரு தருணத்தில் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் நமக்கு இஸ்லாத்தைப் பரப்புவதன் பக்கம் கவனமூட்டுகிறார்கள். மேலும், ஹுஸூர் அவர்கள் நமக்கு தற்காலத்தில் நுட்பமான வழிமுறையில் தப்லீக் செய்வதன் முக்கியத்துவத்தின் பக்கம் கவனமூட்டுகிறார்கள்.

ரிவியூ ஆஃப் ரிலீஜியன்ஸ் மாத இதழின் ஆசிரியர் அவர்கள் ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களிடம் இவ்வாறு கேள்வி கேட்டார்கள்:

ஹுஸூர், சில மக்கள் (ஒன்று) இறைவனை நெருங்கு -வதற்காகத் தம் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திக் கொண்டதை நாங்கள் கோவிட் மூலம் பார்த்தோம். இந்த விதத்தில் உலகப் போரும் ஒரு முக்கியமான மைல் கல்லாக அல்லது எச்சரிக்கைக்குக் காரணமாக அமைய முடியுமா?

இதற்கு பதில் அளித்தவாறு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இவ்வாறு வழிகாட்டல் வழங்கினார்கள்:

இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகி விடும்போது, 'இப்பொழுது நாங்கள் என்ன செய்வது' என்று மக்கள் கேட்கத் துவங்கும்போது, அவர்களை இறைவன் பக்கம் வழிநடத்துவதற்கு நாம் உள்ளோம். மேலும், நாம் மக்களுடன் முன்னரே தொடர்பில் இருக்கும் நிலையில்தான் இது சாத்தியப்பட முடியும். நாம் நேரம் வருவதற்கு முன்னர் பொருத்தமான முறையில் அவர்களுடன் தொடர்பை உருவாக்கிக் கொள்ளவில்லை என்றால், விவகாரம் அவர் -களுக்கு இன்னும் சிரமத்திற்குரியதாக ஆகி விடும். ஏனெனில், அவர்களுக்கு நம்மைப் பற்றி தெரிந்திருக்கவே தெரிந்திருக்காது.

எனவே, நாம் இஸ்லாம் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை தொலைவில் அருகில் என எல்லாப் பக்கமும் பரப்ப வேண்டும். மனித குலத்தை அதைப் படைத்தவனான, அதன் இறைவன் பக்கம் கொண்டு வருவதே நமது நோக்கம் ஆகும் என்ற விஷயத்தை மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது. உலகை அழிவிலிருந்து காப்பாற்று -வதற்காக மனிதகுலத்தின் அடிப்படை விழுமியங்களை நிலைநிறுத்த வேண்டிய அவசியம் உள்ளது."

கண்ணியத்திற்குரியோரே! உலகத்தில் அமைதியை நிலைநிறுத்துவதற்காக, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் போதனைகள்படி நாமும் செயல்பட்டு, பிறருக்கும் இந்த அமைதியை வழங்கும் போதனைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துவதும் நமது பொறுப்பாகும்.

சய்யிதுனா ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹு...) அவர்கள் கூறுகிறார்கள்:

எனவே, இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான ஊழியரை ஏற்றுக்கொள்ளும் மக்களின் பணி என்னவெனில், அவர்கள் இந்தப் போதனையைத் தமது வாழ்வின் அங்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும். திருக்குர்ஆனின் கட்டளைகள்படி செயல்பட வேண்டும். அப்போதுதான் உங்களால் உங்களுடைய சுற்றுப்புறத்தில் அமைதியை உருவாக்க முடியும். உலகத்திற்கும் அமைதிக்கான தூதுச் செய்தியைச் சென்றடைய வைக்க முடியும். இல்லையெனில், முதலில் உங்களுடைய சொல்லையும், செயலையும் ஒன்றாக்குங்கள் (அதற்குப்) பிறகு, எங்களுக்கு அறிவுரை கூறுங்கள் என்று உலகம் கூறும். (ஆகஸ்ட் 21, 2022 அன்று ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவிலிருந்து)

மேலும், ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹு...) அவர்கள் கூறுகிறார்கள்: “இத்தகைய நிலையில் ஏதாவது நம்பிக்கையின் ஒளிக்கதிர் தென்படுகிறது என்றால், அமைதிக்கான உத்தரவாதம் இருக்கிறது என்றால், ஒரே ஒரு நபர் தான் இருக்கிறார்கள். அல்லாஹ் அவர்களை அமைதி மற்றும் சமாதானத்தின் போதனையுடன் உலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தான். அவர்கள் அமைதியின் பேரரசர் ஆவார்கள். அவர்கள் எல்லா மனிதர்களை விடவும் அல்லாஹ்வுக்கு அதிக நேசத்திற்குரியவர் ஆவார்கள். அவர்கள் மீது அல்லாஹ்வின் இறுதியான, முழுமையான, முழுமை செய்யப்பட்ட ஷரீஅத் இறங்கியது. அவர்களின் போதனை அன்பு, நேசத்திற்கான போதனையாகும்.

அவர்கள் தம் இறைவனுடன் இருக்கும் தொடர்பின் காரணமாக, தம் மீது இறங்கிய போதனையை உலகில் பரப்புவதற்காகவும், உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கான கவலையையும், அதற்காக கடுமையான வேதனையையும் கொண்டிருந்ததன் காரணமாகவும், தமது வாழ்வை இன்னலில் ஆழ்த்திக் கொண்டிருந்தார்கள். எந்த அளவு தமது நிலையை ஆக்கிக் கொண்டிருந்தார்கள் என்றால், எந்தஅளவு வேதனையுடன் துடிதுடித்து, அழுது அல்லாஹ்விடம் துஆக்கள் செய்தார்கள் என்றால், அல்லாஹ் (ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களைப் பார்த்து இவ்வாறு கூறினான்:

لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ اَلَّا يَكُوْنُوْا مُؤْمِنِيْنَ

பொருள்: அவர்கள் நம்பிக்கையாளர்கள் ஆகவில்லை என்பதற்காக நீர் ஒருவேளை உம் உயிரையே மாய்த்துக் கொள்வீர்போலும். (26:4)

ஆக, இந்த நபர்தான், மக்கள் தம்மைப் படைத்தவன் பக்கம் திரும்ப வேண்டும் அழிவில் இருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும் தமது உலகையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் தமது மறுமையையும் சீர்படுத்திக் கொள்ள வேண்டும் என்று உள்ளத்தில் மனித குலத்திற்காக வேதனை கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்தையும் உள்ளடக்கிய எப்படிப்பட்ட போதனையை வழங்கினார்கள் என்றால், வேறு எந்த போதனையும் இத்துடன் போட்டியிட முடியாது. எந்த அளவு அமைதிக்கான உத்தரவாதம் அளித்தார்கள் என்றால், உண்மையில் அது அல்லாஹ்வால் வழங்கப்பட்ட உத்தரவாதம் ஆகும். ஆனால், வருத்தத்திற்குரிய விஷயம் என்னவெனில், முஸ்லிம்களும் இந்தப் போதனையை மறந்து விட்டனர். ஈமானுக்கான நாவளவிலான முழக்கத்தை மட்டும் இட்டுக் கொண்டு ஒருவர் மற்றவரின் இரத்தத்துக்காகத் தாகித்துக் கொண்டிருக்கின்றனர். இதற்காக அந்நியர்களிடம் உதவி கோருபவர்களாக இருக்கின்றனர். (ஆகஸ்ட் 21, 2022 அன்று ஜெர்மனி ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவிலிருந்து)

(தொடரும்...)

## தக்வா

**நோன்பு வைத்திருந்தும் கூட நம்மிடம் தற்பெருமை இருக்கும் எனில், நமது பணிகளில், நாம் கூறும் விஷயங்களில் நமக்கு அதிகமான பெருமை இருக்கும் எனில், சுயநலம் பேணும் பழக்கம் இருக்கும் எனில், மக்களால் பாராட்டப்பட வேண்டும் என்ற விருப்பம் இருக்கும் எனில், நமக்குக் கீழுள்ளவர்கள் நம்மை வரவேற்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், எவராவது பாராட்டி அதனால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தால் அல்லது அதற்காக விரும்பினால் அது தக்வா (இறையச்சம்) கிடையாது.**

– ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு...)

உலகின் தற்போதைய இக்கட்டான நிலை குறித்து ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்களின் உரை

# 18-வது தேசிய அமைதிக் கருத்தரங்கு - யு.கே

(மார்ச் 9, 2024 அன்று இலண்டனில் 18-வது தேசிய அமைதிக் கருத்தரங்கு நடைபெற்றது. 30 நாடுகளிலிருந்து வந்திருந்த 550-க்கும் அதிகமான பிரமுகர்களும் விருந்தினர்களும் உட்பட 1200 பேருக்கும் அதிகமானவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.)

- ☛ ஐக்கிய நாடுகள் சபையின் தலைவிதி அதன் தோல்வியுற்ற முன்னோடியான லீக் ஆ.்.ப் நேஷன்ஸின் தலைவிதியைப் பிரதிபலிக்கிறது.
- ☛ வீட்டோ அதிகாரம் இருக்கும் இடத்தில், நீதியின் தராசை ஒருபோதும் சமநிலைப்படுத்த முடியாது.
- ☛ இந்தப் போர்கள் மேலும் தீவிரமடைந்து செல்லட்டும் என்று நாம் வெறுமனே நின்று கொண்டிருந்தால், எண்ணற்ற அப்பாவி உயிர்கள் பலியாகி விடும். நிச்சயமாக, நாமே நமது அழிவு மற்றும் துயரத்தின் ஆசிரியராகத் திகழ்ந்ததாக வரலாறு அவமதிப்புடன் தீர்ப்பளிக்கும்.




தமிழாக்கம்: A. நாஸிர் அஹ்மது

கண்ணியத்திற்குரிய சிறப்பு விருந்தினர்களே! அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு - அல்லாஹ்வின் சாந்தியும் சமாதானமும் உங்கள் அனைவர் மீதும் உண்டாவதாக!

இன்று, மீண்டும் ஒருமுறை, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் நடத்தும் இந்த நிகழ்வில் சமூகத்தில் பிளவைக் களைந்து, உலகில் உண்மையான அமைதியை எவ்வாறு ஏற்படுத்துவது என்பதைப் பற்றி விவாதிக்கவும் சிந்திக்கவும் நாம் ஒன்றுகூடியுள்ளோம்.

இருபது வருடங்களுக்கும் மேலாக நமது தனிப்பட்ட சமூகங்களின் சமூக ஒற்றுமை மற்றும் உலகின் பரந்த அமைதி மற்றும் நல்லிணக்கத்தை உறுதி செய்வதில் அரசாங்கங்கள், அரசியல்வாதிகள் மற்றும் அனைத்து மக்களும் தமது பங்கினை வகிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்தி வருகிறேன்.

மார்க்கத்தின் பெயரால் பொய்யாக மேற்கொள்ளப்படும் மோதல்கள் அல்லது வெளிப்படையான புவிசார் அரசியல் சார்ந்த மோதல்கள் என அனைத்து விதமான போர்களையும் எப்படி முடிவுக்குக் கொண்டு வர முடியும் என்பது குறித்து நான் எனது கருத்துகளை வெளிப்படுத்தி வந்துள்ளேன். நாடுகளுக்கிடையேயான போர்களை முடிவுக்குக் கொண்டு வருவது மட்டுமல்லாமல், உள்நாட்டில் சமூகங்களுக்குள் இருக்கும் விரக்திகளைச் சமாளிப்பது மற்றும் உள்நாட்டுப் போர்கள் அல்லது உள்நாட்டுப் பூசல்கள் எழும் நாடுகளில் அமைதிக்காக பாடுபடுவது பற்றியும் நான் பேசி வந்துள்ளேன். நிச்சயமாக, உள்நாட்டு மோதல்கள் வெளி சக்திகளின் குறுக்கீடு மற்றும் செல்வாக்கினால் தூண்டப்பட்டு, பிராந்தியப் போர்களாக மாறி விடுவதையும், தங்கள் சுயநலன்களுக்குப் பயன்படும் வகையில் அவர்கள் மற்ற நாடுகளில் ஸ்திரமின்மை மற்றும் பிரிவினையைத் தூண்டி விடுவர் என்பதையும் வரலாறு நமக்குக் கற்பிக்கிறது.

கடந்த சில பத்தாண்டுகளாக குவைத், ஈராக், சிரியா மற்றும் சூடான் போன்ற நாடுகளில் இத்தகைய தலையீட்டின் பேரழிவு தரும் விளைவுகளை நாம் கண்டிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, உலகின் பெரும் பகுதியில் நிலவும் பெரும் வல்லரசுகளின் அநீதியான கொள்கைகள் மற்றும் நியாயமற்ற அரசியல், சட்ட மற்றும் பொருளாதார அமைப்பு முறைகள் எப்போதும் அதிகரித்து வரும் சமத்துவமின்மையின் அலையைத் தூண்டி விடுவதைக் குறித்தும், இது உலக உறுதியற்ற தன்மை மற்றும் பாதுகாப்பின்மையை அதிகப்படுத்துவதைக் குறித்தும் நான் மீண்டும் மீண்டும் எச்சரித்து வந்துள்ளேன்.

பல ஆண்டுகளாக, அரசியல்வாதிகள், அறிஞர்கள் அல்லது பொதுமக்கள் நாம் அமைதிக்காகப் பாடுபட வேண்டும் என்ற எனது கூற்றுடன் உடன்பட்டே வந்துள்ளனர். ஆனால், பலர் தமது கருத்தை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இவ்வாறு வெளிப்படுத்தினர். அதாவது தற்போதைய மோதல்கள் ஓர் உலகளாவிய போராக விரிவடைந்து அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதைத் தூண்டும் என்று நான் நம்புவது தவறு என்றும் இது தேவையில்லாத அவநம்பிக்கை என்றும் அவர்கள் கருதினர். உலக விவகாரங்களில் நெருக்கமாக ஈடுபடுகின்ற அரசியல் -வாதிகள், வெளியுறவுக் கொள்கை ஊடகவியலாளர்கள் அல்லது ஆய்வாளர்கள் கூட ஒரு நீண்ட காலமாக இவ்விஷயத்தில் என்னுடன் உடன்படவில்லை. அவர்களின்

இலட்சிய வாதம் மற்றும் நேர்மறை சிந்தனைகளால் மட்டுமே உலகைப் பார்க்கும் விருப்பம் அல்லது வரலாற்றில் இருந்து பாடம் கற்க இயலாத நிலை ஒருவேளை அதற்குக் காரணமாக இருக்கலாம். சர்வதேச உறவுகளில் கடந்த சில பத்தாண்டுகளில் விரிவடைந்து வரும் விரிசல்களை அவர்கள் புறக்கணித்ததாகத் தெரிகிறது. ஒருவேளை அவர்கள் தங்கள் முகத்தை உற்றுநோக்கும் யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ள விரும்பவில்லை. அறியாமை பெரும் மகிழ்ச்சி என்று கூறப்படுவதைப் போன்று அவர்கள் இருந்தனர்.

இருப்பினும், இன்று, இங்கு ஐரோப்பா, மத்தியக் கிழக்கு மற்றும் பிற இடங்களில் போர்கள் மூளும்போது, அதே மக்களில் பலர் இப்போது எச்சரிக்கையை எழுப்புகின்றனர். உலகப் போரைப் பற்றி எச்சரித்து, அதில் அணு ஆயுதங்கள் உலகில் கற்பனை செய்ய முடியாத பேரழிவை ஏற்படுத்தக் கூடும் என்று கூறுகின்றனர். இந்த உணர்தல் இருந்த போதிலும், இந்த மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர என்ன செய்ய வேண்டும் என்பதைக் கருத்தில் கொள்ள பலர் இன்னும் தயாராக இல்லை. மேலும் உலகில் நிலவும் அமைதிக்கான உண்மையான குரல்களைக் கேட்கவும் அவர்கள் தயங்குகிறார்கள்.

இதைக் கருத்தில் கொண்டு, இன்றைய இந்த நிகழ்ச்சியைப் பற்றி நான் சிந்தித்தபோது, நாம் மீண்டும் இங்கு கூடுவதில் ஏதேனும் பயன் இருக்கிறதா என்று நான் ஆச்சரியப்பட்டேன். மாற்றத்தை ஏற்படுத்துவதில் செல்வாக்கு செலுத்தும் ஆற்றலும் திறனும் உள்ளவர்கள் நாம் கூறுவதைக் கேட்கப்போவதில்லை என்பதில் உறுதியாக இருந்தால், சமாதானத்தையும் நீதியையும் பற்றிப் பேசுவதில் நமக்கு என்ன பலன் கிடைக்கப் போகிறது? உலகின் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதை முதன்மை நோக்கமாகக் கொண்டு நிறுவப்பட்ட அந்த நிறுவனங்கள் கூட மேலும் மேலும் பொருத்தமற்றதாகி வருகின்றன என்பது நிதர்சனமான உண்மையாகும்.

எடுத்துக்காட்டாக, ஐக்கிய நாடுகள் சபை ஒரு பலவீனமான மற்றும் கிட்டத்தட்ட சக்தியற்ற அமைப்பாக மாறியுள்ளது. அதில் ஒரு சில மேலாதிக்க நாடுகள் அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்துகின்றன மற்றும் பெரும்பான்மையினரின் கருத்துகளை எளிதில் மீறுகின்றன. ஒவ்வொரு பிரச்சினையையும் அதன் உண்மைகள் மற்றும் தகுதிகளின் அடிப்படையில் தீர்மானிப்பதற்குப் பதிலாக, நாடுகள் தங்கள் சுயநலன்களின்படி கூட்டணிகளை உருவாக்கி வாக்களிக்கின்றன. இறுதியில், சில சலுகை பெற்ற நாடுகளால் முக்கியமான முடிவுகள் எடுக்கப்படுகின்றன. அவற்றின் கைகளில் வீட்டோ அதிகாரம் உள்ளது. அமைதி மற்றும் நீதிக்காக உண்மையாக சேவை செய்வதற்குப் பதிலாக, அவர்களது குறுகிய நலன்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் இடமெல்லாம் தங்கள் வீட்டோவை துருப்புச் சீட்டாகப் பயன்படுத்துகிறார்கள். அவர்களின் முடிவு மற்ற நாடுகளின் அமைதியையும் செழிப்பையும் சிதைத்து, ஏராளமான அப்பாவிகளின் மரணத்திற்கும் அழிவுக்கும் வழிவகுத்தாலும் அவர்கள் அதனைப் பொருட்படுத்துவதில்லை. எனவே, வீட்டோ அதிகாரம் இருக்கும் இடத்தில், நீதியின் தராசை ஒருபோதும் சமநிலைப்படுத்த முடியாது என்பதைத் தெளிவாக உணர வேண்டும்.

இந்தத் தயக்கங்கள் இருந்த போதிலும், உரையாற்றுவதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும் என்பதை நான் உணர்ந்தேன். ஏனென்றால், அமைதியைத் தேடுவதில் ஒருபோதும் தயக்கம் காட்ட வேண்டாம் என்று இஸ்லாம் முஸ்லிம்களுக்குக் கற்பிக்கிறது. அது உண்மையை உரைக்க நமக்குக் கற்பிக்கிறது. அதனால் வல்லமை மிக்க அல்லாஹ்வின் முன் கணக்குக் கேட்கப்படும்போது, ஒரு நம்பிக்கையாளர் அவனது படைப்பை அழிவிலிருந்து காப்பாற்ற தன்னால் இயன்ற அனைத்தையும் செய்ததாக உண்மையாகவே கூற முடியும்.




மேலும், ஜிஹாது என்னும் சொல் தொடர்ந்து தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு தவறாக சித்தரிக்கப்படுகின்றது. இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் கடின உள்ளம், அநீதி மற்றும் கொடூரத்தன்மை கொண்ட தலைவர்கள் முன் ஒருவர் உண்மையாகவும் தைரியமாகவும் பேசுவதே மிகப் பெரிய ஜிஹாது எனக் கூறியுள்ளார்கள். நிச்சயமாக, பலவீனமான நாடுகள் அல்லது அரசியல் சார்பற்ற என்னைப் போன்ற தனிநபர்கள் பேச முயற்சித்தால், அது அரிதாகவே பாராட்டப்படுகிறது. மேலும் அவ்வாறு செய்பவர்கள் சிரமங்களையோ அல்லது பொருளாதாரத் தடைகளையோ எதிர்கொள்ளவும் நேரிடுகிறது.

இருந்த போதிலும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், இஸ்லாத்தின் போதனைகளை அடிப்படையாகக் கொண்டு, அமைதிக்காகவும், அநீதிக்கு ஆளானவர்களின் உரிமைகளுக்காகவும் உறுதியாக பாடுபடுவதைத் தொடர்கிறது. உலகில் அமைதியை நிலைநாட்டுவதற்கு, அரசியல்வாதிகள், கொள்கை வகுப்பாளர்கள், அறிஞர்கள் மற்றும் பிறர் என எங்களின் எல்லைக்குள் இருப்பவர்களிடம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய எந்த வழியையும் பயன்படுத்த இன்ஷா அல்லாஹ் நாம் தொடர்ந்து முயற்சி செய்வோம். உண்மையில், நமது ஜமாஅத் அமைதியை மேலோங்கச் செய்வதற்கும், கடுமையான உடல் அல்லது மன உளைச்சலில் உள்ளவர்களின் துன்பத்தைப் போக்குவதற்கும்

தொடர்ந்து செய்து வரும் முயற்சிகளை உங்களில் சிலர் நன்கு அறிந்திருக்கலாம்.

எனவே, இந்த அறிமுக வார்த்தைகளுக்குப் பிறகு, உலகில் அமைதியை எவ்வாறு நிலைநாட்டுவது என்பது குறித்த எனது எண்ணங்களை இப்போது வழங்க விரும்புகிறேன். மார்க்கத்தைப் பொறுத்தவரையில், பெரிய மார்க்கங்களை நிறுவியவர்களான நபி ஈஸா (அலை) அவர்களும், நபி மூஸா (அலை) அவர்களும் அல்லது வேறு எந்த நபியாகவே இருப்பினும், அல்லது இஸ்லாத்தை நிறுவிய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் சமூகத்தின் அமைதியைப் புறக்கணிக்கவும், அநீதி அல்லது ஆக்கிரமிப்பை நாடவும் தங்களைப் பின்பற்றுபவர்களுக்கு ஒருபோதும் கற்றுக் கொடுக்கவில்லை. சில தீவிர சூழ்நிலைகளில், வரையறுக்கப்பட்ட சக்தியைப் பயன்படுத்த அவர்கள் அனுமதித்தனர் என்பது உண்மைதான் என்றாலும், அது எப்போதும் போர் மற்றும் அடக்குமுறையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்கத்துடன் மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

இஸ்லாத்தைப் பொறுத்தவரை, அதன் சொற்பொருள் அமைதி என்பதாகும். மேலும் அதன் போதனைகளின் ஒவ்வோர் அம்சமும் இந்தப் பெயரைப் பிரதிபலிக்கிறது. உதாரணமாக, திருக்குர்ஆனின் அதிகாரம் 42, வசனம் 41-ல், ஒரு நபர் அல்லது தேசம் அநீதி இழைக்கப்பட்டால், அவர்கள் ஒருபோதும் வரம்புமீறி பதிலளிக்கக் கூடாது அல்லது பழிவாங்கும் நிலையிலேயே இருந்து விடக் கூடாது என்று அல்லாஹ் கட்டளையிடுகிறான். மேலும், சீர்திருத்தத்திற்கு வழிவகுக்கும் என்றால் மன்னிப்பதுவே சிறந்தது என்று அல்லாஹ் கூறுகிறான். திருக்குர்ஆனின் அதிகாரம் 49, வசனம் 10-ல், இரண்டு நாடுகள் போரில் ஈடுபட்டால், நடுநிலையான கட்சிகள் அவர்களிடையே சமரசம் செய்து, நீதி மற்றும் சமத்துவக் கொள்கைகளின் அடிப்படையில் அமைதியை நிலைநாட்ட பாடுபட வேண்டும் என்று கூறுகிறது. சமரசம் செய்து கொண்ட பிறகு, ஒரு தரப்பு, ஒப்பந்தத்தின் விதிமுறைகளை மீறி மீண்டும் போரில் ஈடுபட்டால், ஆக்கிரமிப்பாளர் தனது ஆக்கிரமிப்பு நடத்தையிலிருந்து விலகும் வரை மற்ற நாடுகள் வலுக்கட்டாயமாக ஒன்றுபட வேண்டும். அது நிறுத்தப்பட்டவுடன், மற்ற நாடுகளும் படையைப் பயன்படுத்துவதை நிறுத்த வேண்டும்.

நீதியின் அடிப்படையில் நிலையான அமைதியைக் கட்டமைப்பதே நோக்கமாக இருக்க வேண்டும். ஒரு மூன்றாம் தரப்பினர் தனது சொந்தநலனுக்காக சண்டையிடும் இரு தரப்பினரின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு அவர்களின் உரிமைகளைப் பறிக்கக் கூடாது. இந்தக் கோட்பாடு ஐக்கிய நாடுகள் சபையிலும் பிற தொடர்புடைய அமைப்புகளிலும் கடைபிடிக்கப்பட்டால், மோதல்கள் மிகவும் இணக்கமாகவும் விரைவாகவும் தீர்க்கப்படும். எவ்வாறாயினும், நாடுகள் நேரடியாகவோ அல்லது அவர்களின் சக்தி வாய்ந்த கூட்டாளிகள் மூலமாகவோ வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தும் வரை உண்மையான அமைதி வெளிப்படுவது சாத்தியமற்றது என்பது நிரூபணமாகிக் கொண்டே இருக்கும். வருந்தத்தக்க வகையில், அதன் உள்ளார்ந்த நீதியின்மை காரணமாக, ஐக்கிய நாடுகள் சபையின் தலைவிதி அதன் தோல்வியுற்ற முன்னோடியான லீக் ஆஃப் நேஷன்ஸின்




தலைவிதியைப் பிரதிபலிக்கிறது. சர்வதேச சட்ட அமைப்பு, பலவீனமானதாக இருந்தாலும், முற்றிலும் நிலைகுலைந்து விட்டால், அதனால் ஏற்படும் அராஜகமும் அழிவும் நம்மால் எண்ணிப் பார்க்க முடியாததாகி விடும்.

உலகில் எண்ணற்ற மோதல்கள் நடைபெற்று வரும் நிலையில், மிகவும் அழுத்தமான மற்றும் ஆபத்தானவை இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் நடைபெறுவதும் ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையில் நடந்து வரும் யுத்தமும் ஆகும். இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான மோதல் ஒரு மார்க்கப் போர் என்று சிலர் நம்பலாம் அல்லது அவ்வாறு நம்பும்படி செய்யப் -பட்டிருக்கலாம். இருப்பினும், உண்மையில், இது ஒரு புவிசார் அரசியல் மற்றும் பிராந்திய மோதலே ஆகும். உக்ரைனில் நடக்கும் போரைப் பொறுத்த வரை, இது பிராந்திய காரணங்களுக்காக நடத்தப்படும் ஒரு புவிசார் அரசியல் போர் என்பது தெளிவாகத் தெரிகிறது. இந்தப் போர்களை முடிவுக்குக் கொண்டு வர ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளது என்று நான் உறுதியாக நம்புகிறேன். அது நீதி நிலைநாட்டப்படுவதை உறுதி செய்வதன் மூலமும், வெளி சக்திகளின் நலன்களைப் பாராமல் எந்தத் தீர்வுகள் செய்யப்பட்டாலும் நியாயத்தின் அடிப்படையில் செய்யப்படுவதை உறுதி செய்வதன் மூலமுமே ஆகும். இல்லையெனில், ஐக்கிய நாடுகள் சபை அல்லது சர்வதேச சட்டங்களுக்கு எந்தப் பயனும் இல்லை. மேலும் 'வலிமையே சரி' என்று அறிவிக்கும் ஒரே விதி மட்டுமே முக்கியத்துவம் பெறும்.

உக்ரைன் போரைப் பொறுத்த வரை, ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் ரஷ்யா வீட்டோ அதிகாரத்தைக் கொண்டுள்ளது. அதே நேரத்தில், பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினர் -களாக உள்ள மேற்கத்திய நாடுகளுடன் அதன் கூட்டணியின் காரணமாக உக்ரைனுக்கும் ஒரு வீட்டோ அதிகாரம் உள்ளது. இரு தரப்பினரும் வீட்டோவை திறம்பட பயன்படுத்தினால், எப்படி ஒரு தீர்வுக்கு உடன்பட முடியும்? தங்களுக்குச் சாதகமாக இல்லாத எந்த ஒப்பந்தத்தையும் வீட்டோ செய்ய முடியும் என்று தெரிந்தால், எந்த ஒரு தரப்பினரும் தமது நிலைப்பாட்டிலிருந்து ஓர் அங்குலம் கூட நகர மாட்டார்கள்.

காசாவில் நடப்பதைப் பொறுத்தவரை, இஸ்ரேலியர் -களும் பாலஸ்தீனியர்களும் தங்கள் ஆதரவாளர்களைக் கொண்டிருந்தாலும், பல மாதங்களுக்கு முன்பு தற்போதைய போர் வெடித்ததில் இருந்து வீட்டோ அதிகாரம் இஸ்ரேலுக்கு

ஆதரவாக மட்டுமே பயன்படுத்தப்பட்டது. எடுத்துக்காட்டாக, பிப்ரவரியில், ஐ.நா சபை பாதுகாப்பு கவுன்ஸிலின் 15 உறுப்பினர்களில் 13 பேர் காஸாவில் உடனடி போர் நிறுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர். ஆனால் அமெரிக்கா தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தியது. அதனால் அந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இவ்வாறு பெரும்பான்மையின் ஒரு முடிவு மிக எளிதாக நிராகரிக்கப்படும்போது எப்படி அமைதியை நிலைநாட்ட முடியும்? அது நீதியல்ல; மாறாக அது ஜனநாயகத்தையும் சமத்துவக் கொள்கையையும் நிராகரிப்பதாகும்.



மனிதனால் உருவாக்கப்பட்ட இந்த சட்டங்களுக்கு மாறாக, இஸ்லாத்தின் போதனைகள் நீதியை எந்த அளவுக்கு வலியுறுத்துகின்றன என்றால் திருக்குர்ஆனின் அதிகாரம் 5, வசனம் 9, எந்தவொரு நாட்டின் அல்லது மக்களின் பகைமை ஒருவரை நீதி மற்றும் நியாயப் பாதையில் இருந்து விலகத் தூண்டக் கூடாது என்று கூறுகிறது. இத்தகைய நேர்மையை வெளிப்படுத்துவது இறையச்சத்திற்கு நெருக்கமானது. மார்க்கம் சாராதவர்களும் கூட இந்த முதன்மையான நீதித் தரத்தை ஏற்றுக் கொள்வதன் ஞானத்தையும் நன்மையையும் நிச்சயமாக அங்கீகரிப்பார்கள்.

அதே சமயம், நான் விளக்குவது போல இஸ்லாத்தின் போதனைகள் இருந்தால், இஸ்லாம் ஒரு தீவிரவாத மதம் என்று அடிக்கடி குற்றம் சாட்டப்படுவது ஏன் என்று நீங்கள் சிந்திக்கலாம். உண்மையில், சில அரசியல்வாதிகளின் கோபமூட்டுகின்ற மற்றும் தவறான கருத்துகளால் சமீபத்திய நாட்களில் மீண்டும் இந்த விவாதம் தலைதூக்கியுள்ளது. இது சம்பந்தமாக, முஹம்மது நபி (ஸல்) அவர்களும் அவர்களது நேர்வழி பெற்ற கலீஃபாக்களும் நடத்திய போர்கள் முற்றிலும் தற்காப்புக்காகவே இருந்தன என்பதைத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். இஸ்லாத்தின் எதிரிகளால் ஈவிரக்கமின்றி தாக்கப்பட்டு, பல ஆண்டுகளாக நீடித்த துன்புறுத்தலுக்கு ஆளான பிறகு, கடைசி முயற்சியாக மட்டுமே முஸ்லிம்-களுக்கு எதிர்த்துப் போரிட திருக்குர்ஆன் அனுமதித்தது. இந்த அனுமதி திருக்குர்ஆனின் அதிகாரம் 22, வசனம் 40-இல் தரப்பட்டுள்ளது, இது அநியாயமாக போர் செய்ய நிர்ப்பந்திக்-கப்பட்டவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள உரிமை உண்டு என்று கூறுகிறது. ஏனெனில் அவர்கள் அநீதி இழைக்கப்பட்டுள்ளனர். அத்துடன் அடக்குமுறை மற்றும் கொடுமைக்கு ஆளாகியுள்ளனர்.

மேலும், போரிடுவதற்கான இந்த அனுமதி இஸ்லாத்தைப் பாதுகாப்பதற்காக மட்டும் அல்லாமல், அனைத்து மார்க்கங்களையும் பாதுகாப்பதற்காகவும், மனசாட்சி சுதந்திரம் மற்றும் நம்பிக்கை சுதந்திரம் ஆகிய கொள்கைகளை நிலைநிறுத்துவதற்காகவும் வழங்கப்-பட்டுள்ளது என்பதைத் திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது. எனவே, அடுத்த வசனத்தில், எல்லாம் வல்ல அல்லாஹ், மற்றவர்கள் மூலம் வரம்புமீறியவர்களைத் தடுக்கவில்லை என்றால், கிறித்தவ தேவாலயங்கள், யூத ஆலயங்கள், கோவில்கள், பள்ளிவாசல்கள் மற்றும் இறைவனின் பெயர் அதிகமாக நினைவுகூரப்படும் அனைத்து வழிபாட்டுத்தலங்-களும் அழிக்கப்பட்டு விடும் என்று கூறுகிறான். எனவே, முஸ்லிம்கள் அனைத்து மார்க்-கங்களின் வழிபாட்டுத்தலங்-களையும் பாதுகாப்பதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளனரே தவிர அவர்கள் மீது தீங்கு விளைவிப்பதற்கு அல்ல,

மேலும், தற்காப்புப் போர்களுக்கான நிபந்தனைகள் நிறைவேறிய இடங்களிலும், இஸ்லாமியப் படையினர் இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களால் வழங்கப்பட்ட கண்டிப்பான போர் விதிகளைப் பின்பற்ற பணிக்கப்பட்டனர். முதலாவதாக, தனிப்பட்ட அல்லது சொந்த நலன்களை நிறைவேற்றுவதற்காகவோ, நிலங்களைக் கைப்பற்றுவதற்காகவோ அல்லது பிறர் மீது மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகவோ ஒருபோதும் போர்கள் செய்யக் கூடாது என்று அன்னார் கூறினார்கள். மாறாக, அவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டால் மட்டுமே முஸ்லிம்கள் போராட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். போர் ஏற்பட்டால், ஆக்கிரமிப்பாளரைத் தடுக்க மற்ற நாடுகள் ஒன்றிணைய வேண்டும். ஆக்கிரமிப்பாளர் பலத்தைப் பயன்படுத்துவதை நிறுத்தியவுடன், மற்ற நாடுகள் உடனடியாகப் போரை முடித்து நிரந்தர அமைதியை நிலைநாட்ட முயல வேண்டும். மேலும் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பொதுமக்களைக் குறி வைப்பதை முற்றிலும் தடை செய்தார்கள். இது நவீன உலகில் நடக்கும் போர்களில் மிகவும் பொதுவான ஒன்றாக ஆகி விட்டது. மேலும், போரின் எல்லை முடிந்த வரை மட்டுப்படுத்தப்பட்டதாக இருப்பதை உறுதி செய்யுமாறு அன்னார் முஸ்லிம்களுக்கு அறிவுறுத்தினார்கள். பிரதேசம் மற்றும் வழிமுறைகள் ஆகிய இரண்டிலும் போரின் அனைத்து விதமான விரிவாக்கமும் தவிர்க்கப்பட வேண்டும்.

ஒருவரின் எதிரி வழிபாட்டுத்தலத்தை இராணுவத் தளமாகப் பயன்படுத்தாத வரை, அதற்குள் அல்லது அதற்கு அருகில் கூட சண்டையிட்டு வழிபாட்டுத் தலத்தின் புனிதத்தை மீறுவது அனுமதிக்கப்படவில்லை என்றும் இஸ்லாம் போதிக்கிறது. எதிரிகளின் வழிபாட்டுத்தலங்களை இடிப்பது அல்லது இழிவுபடுத்துவது கண்டிப்பாக தடை செய்யப்-பட்டுள்ளது. மேலும், எதிரி வீரர்களின் உடல்களைச்

சிதைக்கும் பழக்கத்தை ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தடை செய்து, அவர்களின் உடல்களைக் கவனமாகவும் மரியாதையுடனும் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தி -னாரகள். போரில் எந்த விதமான ஏமாற்றுதலும் அனுமதிக்கப்படவில்லை என்றும் அன்னார் போதித்தாரகள். ஏற்கனவே கூறியபடி, பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பிற அப்பாவி பொதுமக்கள் ஒருபோதும் குறி வைக்கப்படக் கூடாது. அதே போன்று, பாதிரியார்கள், குருமார்கள் அல்லது பிற மதத் தலைவர்கள் தங்கள் மதக் கடமைகளைச் செய்வதிலிருந்து தடுக்கவோ அல்லது அவர்கள் மீது தீங்கு செய்யவோ கூடாது.

இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்கள் முஸ்லிம் வீரர்கள் போர்களின் போது பொதுமக்களிடையே எந்த விதமான பயங்கரவாதத்தையும் அச்சத்தையும் ஏற்படுத்து -வதையும் தடை செய்தார்கள். உண்மையில், போரில் ஈடுபடாத அனைவரும் மற்றும் பொதுமக்களும் அன்பாக நடத்தப்பட வேண்டும். அவர்களுக்கு எதிராக எந்த அநீதியும் இழைக்கப்படக் கூடாது. மேலும், சாதாரண பொது -மக்களுக்குக் கவலை அல்லது அசௌகரியத்தை



உருவாக்கும் விதத்தில் நகரங்கள் அல்லது பிற பகுதிகளில் முஸ்லிம் படைகள் முகாம்களையோ தளங்களையோ அமைக்கக் கூடாது என்றும் அவர்கள் அறிவுறுத்தினார்கள். போரின்போது, வீரர்கள் தங்கள் எதிரிகளை முகத்தில் தாக்கக் கூடாது என்றும், அவர்களுக்குக் குறைந்தபட்ச தீங்கு மற்றும் துயரத்தை மட்டுமே ஏற்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் கூறினார்கள். போர்க் கைதிகள் பிடிபட்டால், சிறையில் அவர்களின் உறவினர்களிடமிருந்து பிரிக்கப்பட மாட்டார்கள். கூடுதலாக, போர்க் கைதிகளை வசதியாக ஆக்குவதற்கு ஒவ்வொரு முயற்சியும் செய்யப்பட வேண்டும். எந்த அளவிற்கு எனில் அவர்களின் வசதி மற்றும் தேவைகளுக்கு சிறைபிடித்தவர்களின் தேவைகளை விட முன்னுரிமை அளிக்கப்படும். ஒரு முஸ்லிம் போர்க் கைதியிடம் ஏதேனும் கொடுமை அல்லது கடுமையைக் காட்டினால், அதற்குப் பரிகாரம் செய்வதற்காக அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் மற்றொரு அறிவுறுத்தல் என்னவென்றால், பிற நாடுகளின் பிரதிநிதிகள் அல்லது தூதர்கள் உயர்வாக மதிக்கப்பட வேண்டும். மேலும் அவர்களின் தரப்பில் ஏதேனும் தவறுகள் அல்லது அவமதிப்புகள் ஏற்பட்டு விட்டால் அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் நலனுக்காக அவை புறக்கணிக்கப்பட வேண்டும்.

எனவே இவைதான் அடிப்படை இஸ்லாமிய போர் விதிகள் ஆகும். மேலும் ஒரு முஸ்லிம் இந்த விதிகளை மீறினால், அவர்கள் நீதிக்காக போராடவில்லை என்பதை அவை நிரூபிப்பதாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். மாறாக, அவர்கள் கொடுமை மற்றும் சுயநலத்திற்காகவும் போராடுகிறார்கள். சந்தேகத்திற்கு இடமின்றி, ஒவ்வொரு முஸ்லிம் நாடும் அரசாங்கமும் இந்த இஸ்லாமிய போதனைகளைக் கடைபிடிக்க வேண்டும். மார்க்கத்தை ஒதுக்கி வைத்து விட்டு, முஸ்லிம் அல்லாத நாடுகள் இந்தக் கொள்கைகளை ஏற்றுக் கொண்டால், போர்கள் நடந்தாலும், அதனால் தலைமுறை தலைமுறையாக ஆழமாக வேரூன்றிய பகைகள் உருவாக வழி இருக்காது என்று நான் நம்புகிறேன். எனவே, மேற்கத்திய நாடுகளாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய உலகத்தின் மீது பகைமை கொண்ட நாடுகளாக இருந்தாலும் சரி, முஸ்லிம் நாடுகளாக இருந்தாலும் சரி, போரில் ஈடுபடும் அனைத்து நாடுகளும், போர் மற்றும் மோதலைத் தீர்க்கும் இந்தக் கொள்கைகளின்படி செயல்பட்டால் மட்டுமே அமைதியை நிலைநாட்ட முடியும் என்பதை அங்கீகரிக்க வேண்டும். இல்லையெனில், நாம் ஒரு பேரழிவைத் தரும் உலகப் போரின் உச்சத்தில் கிடக்கிறோம், இது சந்தேகத்திற்கு இடமின்றி நமது கற்பனைக்கு அப்பாற்பட்ட அழிவு மற்றும் படுகொலைகளுக்கு வழி வகுக்கும்.

நான் முன்பே சொன்னதுபோல், இப்போது பலர் அதே முடிவுக்கு வருகிறார்கள். எடுத்துக்காட்டாக, கொலம்பியா பல்கலைக்கழகத்தின் பெரும் மதிப்பிற்குரிய பொருளாதார நிபுணர் பேராசிரியர் ஜெ.ஃப்ரி சாக்ஸ் எழுதுகிறார்: “உலகம் அணுசக்தி பேரழிவின் விளிம்பில் உள்ளது. ஏனெனில் மேற்கத்திய அரசியல் தலைவர்கள் தீவிரமடைந்து வரும் உலகளாவிய மோதல்களின் காரணங்களைப் பற்றி வெளிப்படையாகக் கூறத் தவறி விட்டனர்.” அவர் தொடர்கிறார்: “மேற்கு நாடுகள் உன்னதமானவை, ரஷ்யாவும் சீனாவும் தீயவை என்ற இடைவிடாத மேற்கத்திய பரப்புரை எளிமையானதும் அசாதாரணமான முறையில் ஆபத்தானதும் ஆகும். இது மிகவும் உண்மையான மற்றும் அழுத்தமான இராஜதந்திரத்தைக் கையாள்வதற்காக அல்ல. மாறாக இது பொதுமக்களின் கருத்தை கையாளும் முயற்சியாகும்.” பேராசிரியர் சாக்ஸ் தொடர்கிறார்: “அனைத்திற்கும் மேலாக, மிகவும் ஆபத்தான இந்த நேரத்தில், ஐரோப்பிய தலைவர்கள் ஐரோப்பிய பாதுகாப்பின் உண்மையான மூலாதாரத்தைப் பின்பற்ற வேண்டும்: அமெரிக்க மேலாதிக்கத்தை அல்ல. மாறாக, உக்ரேன் உட்பட, ரஷ்யா உட்பட, அனைத்து ஐரோப்பிய நாடுகளின் நியாயமான பாதுகாப்பு நலன்களை மதிக்கும் ஐரோப்பிய பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பார்க்க வேண்டும். ஆனால் கருங்கடலில் நேட்டோ விரிவாக்கங்களைத் ரஷ்யா தொடர்ந்து எதிர்த்து வருகிறது. இந்தக் கட்டத்தில், ஐரோப்பிய மற்றும் உலகளாவிய பாதுகாப்பிற்கான உண்மையான பாதை இராஜதந்திரமே தவிர, இராணுவ விரிவாக்கம் அல்ல.”

மேலும், இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நடந்து வரும் போர் மற்றும் நாளுக்கு நாள் மோசமடைந்து வரும். காசாவில் உள்ள மனிதாபிமான நிலைமை பற்றி அதிகம் எழுதப்பட்டுள்ளது அல்லது பேசப்பட்டுள்ளது. உதாரணமாக, சமீபத்தில் ஒரு நேர்காணலின் போது, யூதரான அமெரிக்க செனட்டர் பெர்னிசாண்டர்ஸ், இஸ்ரேலிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கடுமையாகக் கண்டித்துள்ளார். அவர் கூறினார்:"நேதன்யாகுவும் அவரது வலதுசாரி அரசாங்கமும் பாலஸ்தீன மக்களுக்கும், காசா மக்களுக்கும் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறது என்பது விவரிக்க முடியாதது மற்றும் சொல்ல முடியாதது. அதாவது, ஏற்கனவே கொல்லப்பட்ட 25-26 ஆயிரம் பேரை நாம் பார்க்கிறோம் (இது அவர் நேர்காணல் செய்தபோது இருந்த எண்ணிக்கையாகும். இப்போது இந்த எண்ணிக்கையைத் தாண்டியுள்ளது). அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள் மற்றும் குழந்தைகள். 65,000 பேர் காயமடைந்துள்ளனர். காசாவில் 70 சதவீதம் வீடுகள் சேதமடைந்துள்ளன அல்லது அழிக்கப்பட்டுள்ளன என்பதை நாம் பார்க்கிறோம். 1.8 மில்லியன் மக்கள் தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டதை நீங்கள் பார்க்கிறீர்கள். அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்பது இறைவனுக்குத்தான் தெரியும்."

செனட்டர் சாண்டர்ஸ் தொடர்ந்து கூறினார்: "இப்போதே, எல்லோரும் இதைக் கேட்பார்கள் என்று நம்புகிறேன். இலட்சக்கணக்கான குழந்தைகள் பட்டினியால் மரணிக்கும் சாத்தியக்கூறுகளை நீங்கள் பார்க்கிறீர்கள். இஸ்ரேலுக்கு நிதியுதவி செய்வதன் மூலம் அமெரிக்காவில் இருக்கும் நாங்களும் நடப்பவற்றிற்கு உடந்தையாக இருக்கிறோம். பாலஸ்தீன மக்களுக்கு எதிரான இந்தப் போரைத் தொடர்வதற்கு நெதன்யாகு அரசாங்கத்திற்கு இன்னொரு அனுமதி வழங்குவது என்னைத் திகைப்பிற்கு ஆளாக்கி விடும்."

மத்தியக் கிழக்கில் எப்படி ஒரு தீர்வை எட்ட முடியும் என்று கேட்டதற்கு, செனட்டர் சாண்டர்ஸ், "அந்தப் பிராந்தியத்தின் வரலாறு பயங்கரமானது. இது ஹோலோகாஸ்டுடன் தொடர்புடையது., இப்பிரச்சினை 6 மில்லியன் யூதர்கள், இலட்சக்கணக்கான பாலஸ்தீனியர்கள் தங்கள் வீடுகளில் இருந்து இடம்பெயர்ந்ததுடன் தொடர்புடையது. ஆனால் எப்படியும் சொந்த தாயகத்தின் உரிமை பாலஸ்தீனிய மக்களுக்கு உண்டு. எனவே, நாங்கள் இரு நாட்டின் தீர்வு பற்றி பேசுகிறோம்."

நான் மேற்கோள் காட்டிய இரண்டு நபர்களைத் தவிர, பல விமர்சகர்களும் நான் நீண்ட காலமாக எச்சரித்து வந்த உலகின் நெருக்கடி நிலையைப் பற்றி இப்போது அதே முடிவுக்கு வருகிறார்கள். இதில் நான் திருப்தி அடையவில்லை. மாறாக, மிகவும் தாமதமாகி விடுவதற்கு முன்னர், உலகம் அதன் உணர்வுக்கு வந்து, உலகில் நடக்கும் மிருகத்தனங்கள் மற்றும் போர்களுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று நான் முழு மனதுடன் நம்புகிறேன். அதற்காக பிரார்த்தனை செய்கிறேன். நிச்சயமாக, இஸ்ரேலுக்கும் ஹமாஸ் அல்லது பாலஸ்தீனத்துக்கும் இடையே முழுமையான போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதும், ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலும் முழுமையான போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதுவும் எனது கருத்தாகும். அதன் பிறகு, அந்தந்த கூட்டணியினரை மேலும் போருக்குத் தூண்டுவதற்குப் பதிலாக, சர்வதேச சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களும், நம்பிக்கையற்ற நிலையில் தேவையில் உள்ளவர்களுக்கு உதவவும், நீடித்த மற்றும் அமைதியான தீர்வைக் கொண்டு வருவதில் கவனம் செலுத்தவும் நிவாரண முயற்சிகளை முடுக்கி விடுவதை உறுதிசெய்யவும் முன்னுரிமை அளிக்க வேண்டும். அதற்குப் பதிலாக, இந்தப் போர்கள் மேலும் தீவிரமடைந்து செல்லட்டும் என்று நாம் வெறுமனே நின்று கொண்டிருந்தால், எண்ணற்ற அப்பாவி உயிர்கள் பலியாகி விடும். நிச்சயமாக, நாமே நமது அழிவு மற்றும் துயரத்தின் ஆசிரியராகத் திகழ்ந்ததாக வரலாறு அவமதிப்புடன் தீர்ப்பளிக்கும்.

முடிவாக, அணு ஆயுதப் போரினால் ஏற்படும் கதிர்வீச்சின் தீய விளைவுகளிலிருந்து நமது வருங்கால சந்ததியினரைக் காப்பாற்ற விரும்பினால், அவர்களை இழப்பு மற்றும் விரக்தியிலிருந்து காப்பாற்ற விரும்பினால், அவர்களின் சாபங்கள் மற்றும் புலம்பல்களிலிருந்து நம்மைக் காப்பாற்ற விரும்பினால், நாம் அவசரத்துடனும் விவேகத்துடனும் செயல்பட வேண்டும். அரசியல் தலைவர்களும் கொள்கை வகுப்பாளர்களுடன் தொடர்புடையவர்களும் மற்றவர்கள் மீது தங்கள் மேன்மையை நிலைநிறுத்துவதற்காக கண்மூடித்தனமான சுயநலத்துடன் இருப்பதை விட மனிதகுலத்தின் சிறந்த நலனுக்கான நீண்ட கால கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டும். தேசிய, அரசியல் மற்றும் பிற நலன்களை ஒதுக்கி விட்டு, மனித குலத்தின் சிறந்த நன்மைக்காகவும், நமது எதிர்கால சந்ததியினருக்கு வளமான உலகத்தை விட்டுச் செல்வதை உறுதிசெய்யவும் நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். சமத்துவமின்மை, வெறுப்பு மற்றும் இரத்தக்களரிகளால் வரையறுக்கப்பட்ட உலகத்தை விட நம்பிக்கை மற்றும் செழிப்பு நிறைந்த உலகில் நாம் வாழ்வதற்கு உண்மையான அமைதியை நிலைநாட்டுவதில் நமது அனைத்து ஆற்றல்களையும் முயற்சிகளையும் செலுத்துவது காலத்தின் தேவையாகும்.

இந்த வார்த்தைகளுடன், இன்று மாலை எங்களுடன் சேர்ந்து எனது உரையைச் செவிமெடுக்க வந்திருக்கின்ற எங்கள் விருந்தினர்கள் அனைவருக்கும் மனப்பூர்வமாக நன்றி கூறுகிறேன். நான் நீண்ட நேரம் பேசியதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். ஆனால் உலகின் ஆபத்தான நிலையைக் கருத்தில் கொண்டு அவ்வாறு செய்வது அவசியம் என்று உணர்ந்தேன். நன்றி. மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மிக்க நன்றி.

**இஸ்லாத்தின் திருத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "கடின உள்ளம், அநீதி மற்றும் கொடூரத் தன்மை கொண்ட தலைவர்கள் முன் ஒருவர் உண்மையாகவும், தைரியமாகவும் பேசுவதே மிகப் பெரிய ஜிஹாது ஆகும்."**




அல்லாஹ்வின் அருளால் நாம் அருளுக்குரிய ரமலான் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். பொதுவாக முஸ்லிம்களுக்கு இந்த மாதத்தில் இறை வணக்கத்தின் பால் குறிப்பான கவனம் ஏற்படுகின்றது. அதிலும் குறிப்பாக ரமலான் மாதத்தின் கடைசி பத்து நாட்களில் இறை வணக்கத்தின் பக்கம் அதிக கவனம் செலுத்தப்படுகிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால் குறிப்பாக 27 ரமலான் அன்று புத்தாடை அணிந்து இரவு முழுவதும் விழித்திருந்து துஆ மற்றும் இறைவனை நினைவு கூருவதில் மூழ்குகின்றனர். ஏன் இந்த சிறப்பு துஆக்கள்? இதன் பிண்ணனி என்ன?

ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரழி) அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

எவர் ஈமானின் நிலையில் தனது ஆன்மாவை சுய பரிசோதனைக்கு உட்படுத்தி ரமலானின் நோன்புகளை நோற்கிறாரோ அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. மேலும் எவர் ஈமானின் நிலையில் தன்னுடைய ஆன்மாவைப் பரிசீலித்துவாறு லைலத்துல் கத்ர் இரவில் இறை வணக்கம் செய்வாரோ அவருடைய கடந்த கால பாவங்கள் மன்னிக்கப்படும் (புகாரி)

அந்த லைலத்துல் கத்ர் இரவு எப்போது வருகிறது என்பது தொடர்பாகவும் ஹதீஸில் வருகிறது.

ஹஸ்ரத் ஆயிஷா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ரமலானினுடைய இறுதிப் பத்து நாட்களில் ஒற்றைப்படை இரவுகளில் லைலத்துல் கத்ரைத் தேடுங்கள். (புகாரி)

இந்த ஹதீஸ்களைத் தவறாகப் புரிந்து கொண்டதன் காரணமாக மக்கள் ஆண்டு முழுவதும் இறைவணக்கங்களை மேற்கொண்டாலும், மேற்கொள்ளாவிட்டாலும் ரமலானினுடைய அந்த லைலத்துல் கத்ர் இரவில் மட்டும் இறை வணக்கம் செய்தால் தங்களுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு விடும் என்று கருதுகின்றனர். ஆனால் இது முற்றிலும் ஒரு தவறான புரிதலாகும். ஆம்; நிச்சயமாக பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியது போன்று ரமலானின் கடைசி பத்தில் ஒற்றை படை இரவுகளில் லைலத்துல் கத்ர் இரவு உள்ளதுதான். இருப்பினும், இந்த லைலத்துல் கத்ர் என்பதற்கு வேறு பல பொருள்களும் உள்ளன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: ஒவ்வொரு நபியின் வருகையின் காலகட்டமும் ஒரு லைலத்துல் கத்ர் ஆகும். அவருக்கு வழங்கப்படுகின்ற வேத நூல் வானத்திலிருந்து இறக்கப்படுகிறது. வானவர்கள் வானத்திலிருந்து இறங்குகிறார்கள். மிகப்பெரிய லைலத்துல் கத்ர் நமது நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்ட லைலத்துல் கத்ர் ஆகும். உண்மையில் இந்த லைலத்துல் கத்ர் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் காலம் முதல் கியாமத் வரை நீண்டுள்ளது... கியாமத் நாள் வரைக்கும் நீண்டுள்ள இந்த லைலத்துல் கத்ரில் ஞானம் மிகுந்த விஷயங்கள் யாவும் உலகில் பரப்பப்படும். எங்குமே கிடைக்காத அற்புத அறிவு மற்றும் அழிந்து போன ஞானங்கள் மற்றும் அற்புதமான புகழுரைகள் யாவும் முழு உலகிலும் பரப்பப்படும். மனித திறன்களில் ஒளிந்துள்ள பல்வேறு சக்திகள், அறிவுத் திறன்கள் எவ்வளவு தூரம் வளர முடியுமோ அவ்வளவு வளர்க்கப்படும். இவை அனைத்தும் இந்நாட்களில் மிகுந்த உத்வேகத்துடன் நடந்து கொண்டே இருக்கும். அப்போது ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களின் உதவியாளர் உலகில் தோன்றுவார். உண்மையில் இந்த வசனத்தைத் தான் சூரா ஸில்ஸாலில் விளக்கமாக கூறப்பட்டுள்ளது. ஏனெனில்



சூரா ஸில்ஸாலுக்கு முன்னர் சூரத்துல் கத்ர் உள்ளது. இதன் மூலம் விளக்கப்பட்டுள்ளது என்னவென்றால், இறைவனின் வேதம் லைலத்துல் கத்ரில்தான் இறங்குகிறது. இதுவே இறைவனின் நடைமுறையாகும். நபி எப்பொழுதும் லைலத்துல் கத்ரில் தான் உலகில் தோன்றுவார். லைலத்துல் கத்ரில்தான் வானவர்கள் வானத்திலிருந்து இறங்குகிறார்கள். அவர்களின் ஊக்கத்தின் காரணமாக உலகத்தின் நன்மையின் பக்கம் நாட்டம் ஏற்படுகிறது. இருள் நிறைந்த இரவில் ஆரம்பித்து அதிகாலை விடியல் பொழுது வரை இவ்வாறு நிகழ்ந்து கொண்டே இருக்கிறது.

இந்த மேற்கோளை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

இதுவே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது பல்வேறு நூல்களில் பல இடங்களில் கூறியுள்ள அழகான விளக்கமாகும். இது ஒரு முன்மாதிரியாகும். உலகிற்கு இது புரிந்து விட்டால் குறிப்பாக முஸ்லிம்கள் இதைப் புரிந்து கொண்டால் இறைவனின் இந்த நல்லடியாரை எதிர்ப்பதற்குப் பதிலாக அவருக்கு உதவி செய்பவர்களாகி விடுவர்.

பிறகு இந்த லைலத்துல் கத்ர் இரவு தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இது ஆயிரம் மாதங்களை விடச் சிறந்ததாகும் என்று கூறுகின்றான்.

இந்த வசனத்தை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்:

“இந்த வசனத்தில் இந்த இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது என்று இறைவன் கூறுகிறான். ஆயிரம் மாதங்கள் ஏறக்குறைய 83 வருடங்களுக்கு மேலான காலகட்டமாகும். அதாவது இந்த ஓர் இரவு ஒருவருக்கு கிடைத்து விட்டால் அவர் தனது வாழ்நாள் முழுவதும் செய்த துஆக்களில் இறைவனின் பார்வையில் அவருடைய நன்மைக்காக செய்த துஆக்கள் எல்லாம் ஏற்றுக் கொள்ளப்படு -கின்றன.... அந்த இரவு அவர் செய்கின்ற இறை வணக்கம் முழு வாழ்நாளும் அவர் இறைவணக்கம் செய்வதற்குச் சமமாகி விடுகிறது. ஏனென்றால் அவர் இதன் மூலம் தனது பிறப்பின் நோக்கத்தை அடைந்து விடுகிறார்.”

அவ்வாறு ஒருவருக்கு லைலத்துல் கத்ர் இரவு கிடைத்து விட்டால் இனிமேல் எனக்கு கவலையில்லை என்று அமர்ந்து விடக் கூடாது. மாறாக அவரின் கடமையும் பொறுப்பும் அதிகமாகிறது.

இது தொடர்பாக ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃ.பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

இப்போது ஒருவர் தனக்கு லைலத்துல் கத்ர் கிடைத்து விட்டது. இந்த ஓர் இரவு இபாதத் செய்வது ஆயிரம் மாதங்கள் இபாதத் செய்வதை விடச் சிறந்ததாகும். எனவே நான் இனிமேல் இறைவனை வணங்க வேண்டிய அவசியம் இல்லை என்று கூறினால் அவர் பொய்யர் ஆவார். இறைவனுடைய நேசம் என்பது மனிதனை முன்பை விட அதிகமாக இறை கட்டளைகளைப் பேணக் கூடியவனாகவும் இறைவனின் அடியானாகவும் மாற்றுகிறது. எனவே இந்த நிலை ஏற்பட்டு விட்டால் இறைவனின் நிரந்தரமான அருள் இறங்க ஆரம்பித்து விடுகிறது. (குத்பா ஜுமுஆ 27.08.2010)

லைலத்துல் கத்ர் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

“மனிதனுக்கு அவன் தூய்மையாகும் நேரமே லைலத்துல் கத்ர் ஆகும்.” (மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 536 ரப்வா பதிப்பு)

அதாவது ஒரு மனிதனுடைய பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டு தூய்மை அடைகின்ற அந்தத் தருணமே ஒவ்வொரு மனிதனுக்கும் லைலத்துல் கத்ர் ஆகும். இதை நாம் கீழ்வரும் ஹதீஸிலிருந்தும் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரழி) அவர்கள், பெருமானார் (ஸல்) அவர்களிடத்தில் நான் லைலத்துல் கத்ர் இரவைக் கண்டால் என்ன துஆ செய்ய வேண்டும் என்று வினவியபோது பெருமானார் (ஸல்) அவர்கள் கீழ்வரும் துஆவைக் கற்றுக் கொடுத்தார்கள்.

اللہم انک عفو تحب العفو فاعف عنی

அல்லாஹ்வே! நிச்சயமாக நீ மன்னிப்பவனாவாய். நீ மன்னிப்பதை விரும்புகிறாய். எனவே என்னை மன்னிப்பாயாக!

*(தொடர்ச்சி 23-ஆம் பக்கம் ...)*

# 700 இறை கட்டளைகள்

(தொகுப்பு: ஹனீஃப் அஹ்மது மஹ்மூது)

தமிழாக்கம்: இப்னு யூசுஃப்

8

"எவர் திருக்குர்ஆனின் 700 கட்டளைகளிலிருந்து ஒரு சிறிய கட்டளையையும் விட்டு விடுவாரோ அவர் தனது கரங்களால் ஈடேற்றத்தின் வாசலை அடைத்து விடுகிறார்." – ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

66. ஷய்த்தானிடமிருந்து ஏதாவது துன்பம் நேர்ந்தால் இறைவனை அதிகமாக நினைவு கூர்தல்

إِنَّ الَّذِينَ اتَّقَوْا إِذَا مَسَّهُمْ طَٰئِفٌ مِّنَ الشَّيْطَٰنِ تَذَكَّرُوا
فَإِذَا هُم مُّبْصِرُونَ ۚ

இறையச்சமுடையோருக்கு ஷய்த்தானிடமிருந்து ஏதேனும் ஓர் எண்ணம் ஏற்படும் பொழுது அவர்கள் எச்சரிக்கை அடைகின்றனர். மேலும் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டவர்களாய் விழிப்படைகின்றனர். (அவர்கள் நேர்வழி அடைந்து விடுகின்றனர்). (அல் அஃராஃப் 7:202)

67. அல்லாஹ்வின் நினைவால் உள்ளம் அமைதியடைகின்றது மேலும் பணிவு மற்றும் பயபக்திக்கான காரணியாகவும் அமைகின்றது

الَّذِينَ آمَنُوا وَتَطْمَئِنُّ قُلُوبُهُم بِذِكْرِ اللَّهِ ۗ
أَلَا بِذِكْرِ اللَّهِ تَطْمَئِنُّ الْقُلُوبُ ۗ

இவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள்; இவர்களின் உள்ளங்களே அல்லாஹ்வின் நினைவால் அமைதியடைகின்றன. கவனமாகக் கேளுங்கள். அல்லாஹ்வின் நினைவிலேயே உள்ளங்கள் அமைதி அடைகின்றன. (அர் ரஅது 13:29)

68. அல்லாஹ்வின் பெயர் கூறப்படும்போது உள்ளங்களில் நடுக்கம் ஏற்படுகிறது

إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ إِذَا ذُكِرَ اللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ

(தங்கள் முன்) அல்லாஹ்(வின் பெயர்) நினைவு கூரப்படும்போது, உள்ளங்கள் நடுங்குபவர்களே (உண்மை -யான) நம்பிக்கை கொண்டவர்களாவர். (அல் அன்ஃபால் 8:3)

الَّذِينَ إِذَا ذُكِرَ اللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ

அல்லாஹ்வின் பெயர் கூறப்பட்டால், அவர்களின் உள்ளங்கள் அஞ்சி நடுங்குகின்றன. (அல் ஹஜ் 22:36)

69. அல்லாஹ்வை நினைவு கூர்பவர்களின் தோழமையை மேற்கொள்ளுதல்

وَاصْبِرْ نَفْسَكَ مَعَ الَّذِينَ يَدْعُونَ رَبَّهُم بِالْغَدَوٰةِ وَالْعَشِيِّ
يُرِيدُونَ وَجْهَهُ ۖ وَلَا تَعْدُ عَيْنَاكَ عَنْهُمْ ۚ

தங்கள் இறைவனின் விருப்பத்தை நாடிக் காலையிலும், மாலையிலும் அவனை அழைக்கின்றவர்களுடன் நீர் சேர்ந்திருப்பீராக. நீர் இவ்வுலக வாழ்வின் அலங்காரத்தை விரும்பி, உம் பார்வைகள் அவர்களை விட்டும் கடந்து செல்ல வேண்டாம். (அல் கஹ்ஃப் 18:29)

(குறிப்பு: ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள், وَلَا تَعْدُ عَيْنَاكَ عَنْهُمْ உம் பார்வைகள் அவர்களை விட்டும் கடந்து செல்ல வேண்டாம் என்ற வசனத்தின் அடிக்குறிப்பில் "இதன் பொருள், சஹாபிகளின் தியாகங் -களை மறந்து விடாதிருப்பீராக" என்று எழுதியுள்ளார்கள். இவ்வாறாக இது ஒரு தனிப்பட்ட கட்டளையாகும்).

70. அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்து கவனமற்றவர் -களாய் இருக்கின்றவர்களைப் பின்பற்றுவதிலிருந்து தவிர்ந்து இருத்தல்

وَلَا تُطِعْ مَنْ أَغْفَلْنَا قَلْبَهُ عَن ذِكْرِنَا وَاتَّبَعَ هَوَاهُ وَكَانَ أَمْرُهُ فُرُطًا

நாம் எவனது உள்ளத்தை நம்மை நினைப்பதிலிருந்து கவனமற்றதாக்கி விட்டோமோ அவனுக்குக் கட்டுப்படாதீர். அவன் அற்ப ஆசையைப் பின்பற்றுகிறான். அவனின் நிலை எல்லை கடந்ததாகும். (அல் கஹ்ஃப் 18:29)



فَأَعْرِضْ عَن مَّن تَوَلَّىٰ عَن ذِكْرِنَا

நம்மை நினைவு கூர்வதிலிருந்து விலகியவனை நீர் புறக்கணித்து விடுவீராக. (அந்நஜ்மு 53:30)

71. அல்லாஹ்வை மறந்தவர்களைப் போன்று ஆகிவிடாமல் இருத்தல் மற்றும் அவர்களின் விளைவு

وَلَا تَكُونُوا كَالَّذِينَ نَسُوا اللَّهَ فَأَنسَاهُمْ أَنفُسَهُمْ ۚ

அல்லாஹ்வை மறந்தவர்களைப் போல், நீங்கள் ஆகி விட வேண்டாம். அ(வர்கள் மறந்த)தனால், அவன் அவர்களைத் தங்களையே மறக்கும்படிச் செய்து விட்டான். (அல் ஹஷ்ர் 59:20)

وَلَا تَكُنْ مِّنَ الْغٰفِلِيْنَ

மேலும் ஒருபோதும் (இறைவனை நினைவு கூர்வதிலிருந்து) கவனமற்றவர்களைச் சார்ந்தவராக இருக்க வேண்டாம். (அல் அ.்ரா.்ப் 7:206)

72. அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பறைசாற்றுவீராக.

فَانْظُرْ اِلٰٓى اٰثٰرِ رَحْمَتِ اللّٰهِ كَيْفَ يُحْيِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا

எனவே பூமிக்கு, அதன் மரணத்திற்குப் பின்னர் அல்லாஹ் எவ்வாறு உயிர் கொடுக்கின்றான் என்று அவனது கருணையின் அடையாளங்களைக் காண்பீராக. (அர்ரூம் 30:51)

73. அல்லாஹ்வின் அருட்கொடைகளை நினைவு கூர்தல்.

يٰبَنِيْٓ اِسْرَآءِيْلَ اذْكُرُوْا نِعْمَتِيَ الَّتِيْٓ اَنْعَمْتُ عَلَيْكُمْ

இஸ்ராயீலின் மக்களே! நான் உங்களுக்கு வழங்கிய எனது அருளை நினைத்துப் பாருங்கள். (அல் பகரா 2:41)

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ் உங்களுக்கு செய்த பேருதவியை நினைத்துப் பாருங்கள். (அல் மாயிதா 5:12)

فَاذْكُرُوْٓا اٰلَآءَ اللّٰهِ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ

எனவே நீங்கள் வெற்றி பெரும் பொருட்டு அல்லாஹ்வின் அருகொடைகளை நினைவு கூருங்கள். (அல் அ.்ரா.்ப் 7:70)

❖❖ அல் பகரா 2:48,123,232; ஆல இம்ரான் 3:104; அல் மாயிதா 5:8,21; அல் .்பா(த்)திர் 35:4; ஹூது 11:49.



74. அல்லாஹ்வின் பேரருளை பறைசாற்ற வேண்டும்.

وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ

மேலும் உமது இறைவனது பேரருளைப் பறைசாற்று -வீராக. (அல் ளுஹா 93:12)

وَاذْكُرُوْا نِعْمَتَ اللّٰهِ عَلَيْكُمْ وَمَآ اَنْزَلَ عَلَيْكُمْ مِّنَ الْكِتٰبِ وَالْحِكْمَةِ يَعِظُكُمْ بِهٖ

மேலும் அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய அருட்கொடையையும், அவன் உங்களுக்கு இறக்கிய வேதத்தையும், ஞானத்தையும் நினைத்துப் பாருங்கள். (அல் பகரா 2:232)

75. அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு எந்த ஒரு வரையறையும் இல்லை.

وَاِنْ تَعُدُّوْا نِعْمَتَ اللّٰهِ لَا تُحْصُوْهَا

நீங்கள் அல்லாஹ்வின் அருள்களை எண்ணத் தொடங்கினால், அவற்றை உங்களால் கணக்கிட முடியாது. (இப்ராஹீம் 14:35)

فَبِاَيِّ اٰلَآءِ رَبِّكَ تَتَمَارٰى

எனவே (மனிதனே!) உனது இறைவனின் அருள்களுள் எதனைப் பற்றி நீ சந்தேகப்படுகின்றாய்? (அந் நஜ்ம் 53:56)

❖❖ அந் நஹ்ல் 16:19

76. அல்லாஹ்வின் கருணை மிகவும் விசாலமானது.

وَرَحْمَتِيْ وَسِعَتْ كُلَّ شَيْءٍ فَسَاَكْتُبُهَا لِلَّذِيْنَ يَتَّقُوْنَ وَيُؤْتُوْنَ الزَّكٰوةَ وَالَّذِيْنَ هُمْ بِاٰيٰتِنَا يُؤْمِنُوْنَ

என் கருணை எல்லாவற்றையும் சூழ்ந்துள்ளது. எனவே இறையச்சத்தை மேற்கொண்டு ஸகாத் கொடுப்போருக்கும், மேலும் நம் வசனங்கள் மீது நம்பிக்கை கொள்வோருக்கும் நான் அதனைக் கட்டாயம் எழுதுவேன். (அல் அ.்ரா.்ப் 7:157)

77. கடந்தகால தவறுகளை எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்துதல்

وَاذْكُرُوْٓا اِذْ اَنْتُمْ قَلِيْلٌ مُّسْتَضْعَفُوْنَ فِى الْاَرْضِ تَخَافُوْنَ اَنْ يَّتَخَطَّفَكُمُ النَّاسُ فَاٰوٰىكُمْ وَاَيَّدَكُمْ بِنَصْرِهٖ وَرَزَقَكُمْ مِّنَ الطَّيِّبٰتِ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

நீங்கள் சிறுபான்மையினராக இருந்த நேரத்தை நினைத்துப் பாருங்கள். பூமியில் நீங்கள் பலவீனர்களாகக் கருதப்பட்டீர்கள், மக்கள் உங்களைப் பிடித்துச் சென்று விடுவார்களோ என்று பயந்தீர்கள். அவ்வாறிருந்தும் நீங்கள் நன்றி செலுத்தும் பொருட்டு அவன் உங்களுக்கு (மதீனாவில்) இடமளித்தான். தன்னுதவியினால் உங்களை உறுதிப்படுத்தி -னான். மேலும் தூய்மையானவற்றிலிருந்து உங்களுக்கு உணவு வழங்கினான். (அல் அன்.்பால் 8:27)

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهِ اذْكُرُوْا نِعْمَةَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ اَنْجٰىكُمْ مِّنْ اٰلِ فِرْعَوْنَ يَسُوْمُوْنَكُمْ سُوْٓءَ الْعَذَابِ وَيُذَبِّحُوْنَ اَبْنَآءَكُمْ وَيَسْتَحْيُوْنَ نِسَآءَكُمْ

(செவியேற்பவரே!) மூஸா தம் சமுதாயத்தினரிடம் இவ்வாறு கூறிய நேரத்தை(யும் நினைத்துப் பாரும். என் சமுதாயத்தினரே!), .்பிர்அவ்னைச் சேர்ந்தவர்கள், உங்களுக்குக் கடுமையான தண்டனையளித்துக் கொண்டிருந்த நிலையில், உங்களை அவர்களிடமிருந்து அல்லாஹ் காப்பாற்றியபோது அவன் உங்களுக்குச் செய்த அருளை நினைத்துப் பாருங்கள். மேலும், அவர்கள் உங்கள் ஆண்மக்களைக் கொன்றும், உங்கள் பெண்களை வாழவும் விட்டு வந்தனர். (இப்ராஹீம் 14:7)

فَنَادٰى فِى الظُّلُمٰتِ اَنْ لَّاۤ اِلٰهَ اِلَّاۤ اَنْتَ سُبْحٰنَكَ ‌ۖ اِنِّىْ كُنْتُ مِنَ الظّٰلِمِيْنَ ‌ۖ

எனவே அவர் துன்ப வேளையில் (நம்மை) அழைத்து, உன்னையன்றி வணக்கத்திற்குரியவன் எவனுமில்லை. நீ தூய்மையானவன் நிச்சயமாக நான் அநீதியிழைப்பவர்களைச் சார்ந்தவனாக இருந்தேன் என்றார். (அல் அ(ன்)ம்பியா 21:88)

وَاذْكُرُوْۤا اِذْ كُنْتُمْ قَلِيْلًا فَكَثَّرَكُمْ ۖ وَانْظُرُوْا كَيْفَ كَانَ عَاقِبَةُ الْمُفْسِدِيْنَ

நீங்கள் சிறுபான்மையினராக இருந்தபோது இறைவன் உங்களைப் பெரும்பான்மையினராக்கியதை நினைத்துப் பாருங்கள். குழப்பம் செய்தோரின் முடிவு எவ்வாறாயிற்று என்பதையும் பாருங்கள். (அல் அ.்ரா.்.ப் 7:87)

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اذْكُرُوْا نِعْمَةَ اللّٰهِ عَلَيْكُمْ اِذْ جَآءَتْكُمْ جُنُوْدٌ

நம்பிக்கை கொண்டவர்களே! உங்களை எதிர்த்துப் படைகள் வந்த போது, அல்லாஹ் உங்களுக்குச் செய்த அருளை நினைத்துப் பாருங்கள். (அல் அஹ்ஸாப் 33:10)

78. நன்றியை மிக்க கம்பீரத்துடன் வெளிப்படுத்துங்கள்.

اِعْمَلُوْۤا اٰلَ دَاوٗدَ شُكْرًا ؕ وَقَلِيْلٌ مِّنْ عِبَادِىَ الشَّكُوْرُ

தாவூதின் குடும்பத்தினர்களே! நீங்கள் நன்றியுள்ள -வர்களாகச் செயலாற்றுங்கள் (என்று கூறினோம்). ஆனால் என் அடியார்களுள் மிகச் சிலரே நன்றியுள்ளவர்களாக விளங்குகின்றனர். (அஸ் ஸபா 34:14)

79. மனித உறுப்புகளின் படைப்பை எண்ணி நன்றி உணர்வை வெளிப்படுத்துதல்.

وَّجَعَلَ لَـكُمُ السَّمْعَ وَالْاَبْصَارَ وَالْاَفْـِٕدَةَ ‌ۙ لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ

மேலும், நீங்கள் நன்றி செலுத்த வேண்டும் என்பதற்காக, அவன் உங்களுக்குக் காதுகளையும், கண்களையும், உள்ளங்களையும் அளித்துள்ளான். (அந் நஹ்ல் 16:79)

80. அல்லாஹ் வழங்கிய உணவிற்கு நன்றி செலுத்துதல்.

كُلُوْا مِنْ رِّزْقِ رَبِّكُمْ وَاشْكُرُوْا لَهٗ ؕ

நீங்கள் உங்கள் இறைவனின் உணவிலிருந்து உண்டு, அவனுக்கு நன்றி செலுத்துங்கள். (உங்கள் நகரம்) அழகு வாய்ந்த நகரமாகும். (உங்கள்) இறைவன் மிக்க மன்னிப்பவனாவான் (என்று கூறினோம்). (அஸ் ஸபா 34:16)

(தொடரும்...)

## பயணியும் நோயாளியும்

ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எவர் பயணியாகவோ நோயாளியாகவோ இருக்கும் நிலையில் ரமலான் மாதத்தில் நோன்பு வைக்கின்றாரோ அவர் இறைவனின் தெளிவான கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருக்கின்றார். அல்லாஹ், பயணியும் நோயாளியும் நோன்பு வைக்க வேண்டாம் என்று தெளிவாகக் கூறி விட்டான். நோயிலிருந்து விடுபட்டு உடல் நலம் கிடைத்த பிறகு நோன்பு நோற்க வேண்டும். பயணம் முடிந்த பிறகு அவர் நோன்பு நோற்க வேண்டும். ஏனெனில், இரட்சிப்பு இறைவனின் அருளால்தான் கிடைக்க முடியும். தனது செயல்களின் வலிமையைக் காட்டி ஒருவர் இரட்சிப்பைப் பெற முடியாது.

இறைவன், நோய் குறைவாக இருந்தால் அல்லது அதிகமாக இருந்தால் என்று கூறவில்லை. பயணம் சிறிதாக இருந்தால் அல்லது பெரிதாக இருந்தால் என்றும் கூறவில்லை. மாறாக, இது பொதுவான கட்டளையாகும். எனவே பயணி அல்லது நோயாளி நோன்பு வைத்தால் அவர் இறைக் கட்டளையை மீறி நடந்துள்ளார் என்ற ஃபத்வா கட்டாயம் அவர் தொடர்பாக கூறப்படும்.

பெரும்பாலான மார்க்க அறிஞர்கள் ஒருவர் பயணத்தில் அல்லது நோயாளியாக இருக்கும்போது நோன்பு வைத்தால் அது பாவமாகும் என்று கூறியிருப்பதைப் படித்துள்ளேன். ஏனென்றால், நமது நோக்கம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாகும். தனது விருப்பத்திற்கேற்ப செயல்படுவது அல்ல. அல்லாஹ்வின் திருப்தி அவனுக்குக் கட்டுப்படுவதில்தான் இருக்கின்றது. அவன் என்ன கட்டளை இடுகின்றானோ அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும். தன் தரப்பிலிருந்து தனது சுய கருத்துகளை அதில் திணிக்கக் கூடாது.

(ஜுமுஆ பேருரை 03.06.2016)

# உலக சாதனைகளும் மகிழ்ச்சிகளும் நிரந்தரமானவை அல்ல!



- ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை)

வெற்றியின் எந்தவொரு சந்தர்ப்பமும் ஒருவரை மகிழ்ச்சியால் நிரப்புகிறது. திருக்குர்ஆனில் மூன்று வகையான மகிழ்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை, லஹ்வ், லாப் மற்றும் த.்.பகுர். லஹ்வ் என்ற வார்த்தை உணவின் மூலம் கிடைக்கும் மகிழ்ச்சியை உள்ளடக்கியது. லாப் என்பது திருமணம் போன்றவற்றின் மகிழ்ச்சியைக் குறிக்கிறது. த.்.பகுர் என்பது செல்வம் முதலியவற்றின் மூலம் கிடைக்கும் இன்பத்தைக் குறிக்கிறது. இவை மூன்று வகை இன்பங்களாகும். இவற்றைத் தவிர வேறு எந்த மகிழ்ச்சியும் இல்லை. இருப்பினும், இந்த சாதனைகள் மற்றும் மகிழ்ச்சிகள் என்றென்றும் நிலைக்காது என்பதை எப்போதும் நினைவில் கொள்ளுங்கள். உண்மையில், இந்த இன்பங்களில் உங்கள் உள்ளங்களை இணைத்துக் கொண்டால், நீங்கள் இழப்பின் நிலையில் இருப்பீர்கள். இறுதியில், இந்த இன்பம் கசப்பாக மாறத் தொடங்கும் ஒருநேரம் வருகிறது.

உலக சாதனைகள் ஒருபோதும் சோதனைகளிலிருந்து விடுபட்டிருப்பதில்லை. திருக்குர்ஆன் கூறுகிறது:

خَلَقَ الْمَوْتَ وَالْحَيٰوةَ لِيَبْلُوَكُمْ பொருள், இறைவன் உங்களைச் சோதிப்பதற்காக மரணத்தையும் வாழ்வையும் படைத்துள்ளான். (67:3) வெற்றியும் தோல்வியும் கூட வாழ்க்கை மற்றும் மரணம் பற்றிய விஷயமே ஆகும். வெற்றி என்பது ஒருவகையான வாழ்க்கை ஆகும். ஒரு நபர் ஏதோ ஒரு காரியத்தில் வெற்றி பெற்றதை அறிந்தவுடன், அவர் புத்துணர்ச்சி பெறுகிறார். மேலும் ஒரு புதிய வாழ்க்கை அவருக்குள் ஊதப்படுகிறது. ஒரு நபர் தோல்வியுற்றதை அறிந்தால், அவர் உயிருடன் இருந்த போதும் மரணித்தது போல் ஆகி விடுகிறார். மேலும் பல பலவீனமான இதயம் கொண்டவர்கள் மரணித்தும் விடுகிறார்கள். சாதாரண வாழ்க்கையும் மரணமும் எளிதானது. ஆனால் நரக வாழ்க்கையும் மரணமும் மிகவும் வேதனையானவை என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும். நற்பேறு பெற்றவர் அவரது தோல்விக்குப் பிறகு இறுதியில் வெற்றி பெறுகிறார், இதனால் இன்னும் நற்பேறு பெற்றவர் ஆகிறார். மேலும் அல்லாஹ்வின் மீதான அவரது நம்பிக்கை அதிகரிக்கிறது. அத்தகைய ஒரு நபர் இறைவனின் அற்புதங்களைப் பற்றி சிந்திக்கும்போது மகிழ்ச்சி அடைகிறார்.

உலக வெற்றி அவர்களுக்கு இறைவனைப் பற்றிய புரிதலை அதிகரிப்பதற்கான ஒரு வழியாகும். அத்தகையவர்களுக்கு, உலக வெற்றி அவர்களை உண்மையான வெற்றிக்கு இட்டுச் செல்லும் ஒரு வழியாகும் (இஸ்லாமிய சொற்களில் இது .்.பலாஹ் என்று அழைக்கப்படுகிறது). உண்மையான மகிழ்ச்சியும் உண்மையான ஆறுதலும் உலகத்திலும் அதன் உடைமைகளிலும் இருப்பதில்லை என்பதை நான் உறுதியாகக் கூறுகிறேன். உண்மை என்னவென்றால், உலகின் அனைத்து அம்சங்களையும் பயன்படுத்திவிட்ட பிறகும், ஒரு நபர் உண்மையான மற்றும் நிரந்தரமான மகிழ்ச்சியை அடைய முடியாது.

பணக்காரர்களும் செல்வந்தர்களும் எப்போதும் மகிழ்ச்சியான நிலையில் இருப்பதாக நீங்கள் காண்கின்றீர்கள். ஆனால் அவர்களின் நிலையை அரிக்கும் தோலழற்சியால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு ஒப்பிடலாம். அவர் தனது தோலைச் சொறியும்போது, அதில் ஓர் இனிமையான உணர்வை அனுபவிக்கிறார். ஆனால் அவரது அரிப்புகளின் இறுதி விளைவு என்னவென்றால், அதில் இரத்தம் வர ஆரம்பிக்கிறது. எனவே, இந்த உலகியல் மற்றும் தற்காலிக சாதனைகளை நினைத்து, உண்மையான வெற்றியை நீங்கள் இழந்து விடும் அளவுக்கு மகிழ்ச்சி அடையாதீர்கள். மாறாக, உங்கள் உலக சாதனைகள் இறைவனை அறிந்து கொள்ள வழிவகுக்கும் ஒரு வழி என்று கருதுங்கள். உங்கள் தீர்மானம் மற்றும் முயற்சியில் பெருமை கொள்ளாதீர்கள் மேலும் எந்த ஒரு சாதனையும் உங்களிடம் உள்ள திறன் அல்லது உங்கள் முயற்சியால் விளைந்தது என்று எண்ணாதீர்கள்.

மாறாக, எவருடைய நேர்மையான முயற்சியையும் வீண் போக விடாத கருணையுள்ள இறைவன், உங்கள் உழைப்பின் பலனைத் தந்திருக்கிறான் என்று நீங்கள் நம்ப வேண்டும். ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் தேர்வில் தோல்வி அடைவதை நீங்கள் கவனிக்கவில்லையா? இந்த மாணவர்கள் அனைவரும் முயற்சி செய்யவில்லையா? அவர்கள் முட்டாள்களும் அறிவற்றவர்களுமா? இல்லவே இல்லை. அவர்களில் சிலர் மிகவும் அறிவுத்திறன் பெற்றவர்களும் பிரகாசமானவர்களுமாவர். அவர்கள் தேர்ச்சி பெற்ற பல மாணவர்களை விட புத்திக்கூர்மையானவர்கள். எனவே, ஒரு நம்பிக்கையாளர் ஒரு சாதனையால் அருள் செய்யப்படும் போதெல்லாம் தனது முயற்சியை இறைவன் வீண் போகவிடவில்லை என்பதற்காக அல்லாஹ்விற்கு நன்றி ஸஜ்தாக்கள் செய்வது அவசியம் மட்டுமின்றி அது அவர் மீதான கடமையுமாகும். இந்த நன்றியுணர்வின் விளைவாக, அவர் அல்லாஹ்வின் மீதான அன்பில் அதிகரித்து, நம்பிக்கையில் முன்னேறுவார். உண்மையில், இது மட்டுமல்ல. அப்படிப்பட்டவர்கள் இன்னும் கூடுதலான வெற்றிகளுடன் அருளைப் பெறுவார்கள். ஏனென்றால் அல்லாஹ் தனது அருட்கொடைகளுக்கு ஒருவர் நன்றி செலுத்தினால், அத்தகையவர் மீது அவன் தனது அருட்களை அதிகப்படுத்துவதாகக் கூறுகின்றான். ஆனால் அவனுடைய அருட்கொடைகளுக்கு ஒருவர் நன்றி செலுத்தாதவராக இருந்தால், அத்தகையவர் கடுமையான தண்டனையால் பிடிக்கப்படுவார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

(மல்.்.பூஸாத் தொகுதி 1 (ஆங்கிலப் பதிப்பு) பக்கம் 151-153)

# துஆ செய்யுங்கள்! நம்மிடம் துஆ என்ற ஆயுதம் மட்டுமே உள்ளது

ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 13 அக்டோபர் 2023 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையிலிருந்து...

இன்றைய நாட்களில் உலகின் நிலைமைகள் தொடர்பாக நான் தற்போது ஒரு துஆவிற்காகவும் கூற விரும்புகின்றேன். சில தினங்களாக ஹமாஸ் மற்றும் இஸ்ரேலுடைய போர் நடந்து வருகின்றது. அதன் காரணமாக தற்போது இரு தரப்பிலும் அப்பாவிப் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் என்று எந்த வித்தியாசமும் இன்றி கொல்லப்படுகின்றனர். இஸ்லாமோ போர் சூழல்களிலும் கூட பெண்கள், குழந்தைகள் மற்றும் எந்த வகையிலும் போரில் பங்கேற்காத மக்களைக் கொலை செய்வதற்கு அனுமதி வழங்கவில்லை. மேலும் அந்த விஷயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடுமையான வழிகாட்டலும் வழங்கியுள்ளார்கள். (சுனன் அபீதாவூது, கிதாபுல் ஜிஹாத், பாபு ஃபீ துஆவுல் முஷ்ரிகீன், ஹதீஸ் எண். 2614)

உலகம் இதனைக் கூறிக் கொண்டிருக்கின்றது. மேலும் உண்மையும் எப்படி இருக்கின்றது என்றால் இந்தப் போரை ஹமாஸ் துவங்கியது. மேலும் இஸ்ரேலிய குடிமக்களை எந்த வித்தியாசமுமின்றி கொலை செய்தனர். இதற்கு முன் இஸ்ரேலிய இராணுவம் இதுபோன்று எத்தனையோ அப்பாவிகளை, பாலஸ்தீனியர்களைக் கொலை செய்து கொண்டிருந்தது என்பது ஒரு பக்கம். எவ்வாறிருப்பினும் இஸ்லாமிய போதனைக்கேற்ப முஸ்லிம்கள் செயல்பட வேண்டும். இஸ்ரேலிய இராணுவம் என்ன செய்ததோ அது அவர்களின் செயல் ஆகும். மேலும் அதனைத் தீர்ப்பதற்கு வேறு வழிமுறைகள் இருந்தன.

ஒரு போர் ஆகுமானதாக இருந்தால் பின்னர் இராணுவத்துடன் போரிட முடியும். ஆனால் பெண்களுடன், குழந்தைகளுடன், தீங்கிழைக்காத மக்களுடன் போர் புரிதல் கூடாது. எவ்வாறிருப்பினும், இந்த அடிப்படையில் ஹமாஸ் எடுத்த முடிவு முற்றிலும் தவறானதாக இருந்தது. அதன் பாதிப்பு அதிகம்; பயன் குறைவு. அது என்னவாக இருந்தாலும் அதற்கான தண்டனை அல்லது அதற்கான போர் ஹமாஸ் வரை மட்டுமே வரையறுக்கப்பட்டதாக இருந்திருக்க வேண்டும். இந்த எதிர் வினை இருந்தால் பின்னர் இதுவே அசல் வீரம் மற்றும் தைரியம் ஆகும். ஆனால் தற்போது இஸ்ரேலிய அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கின்றதோ அதுவும் மிகவும் அபாயகரமானதாகும். இனி இந்த விவகாரம் நிற்காது என்று தோன்றுகின்றது. எவ்வளவு கணக்கற்ற மக்களுடைய, பெண்கள் மற்றும் குழந்தைகளுடைய அப்பாவி உயிர்கள் பலியாகி இருக்கும்! மேலும் அதனை நம்மால் கற்பனை கூட செய்ய முடியாது.

நாங்கள் காஸாவை முற்றிலும் அழித்து விடுவோம் என்று இஸ்ரேலிய அரசாங்கமோ அறிவிப்பு செய்திருக்கின்றது. மேலும் அதற்காக அவர்கள் எண்ணற்ற, கணக்கற்ற Bombardment செய்துள்ளனர். (கணக்கற்ற குண்டுகளை வீசியுள்ளனர்.) நகரத்தை சாம்பல் குவியலாகவே ஆக்கி விட்டனர். தற்போது இந்தப் புதிய சூழல் உருவாகியிருக்கின்றது. அதாவது ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்களை காஸாவிலிருந்து வெளியேறி விடுங்கள் என்று அவர்கள் கூறுகின்றனர். அந்த



மக்களில் சிலர் வெளியேறவும் துவங்கி விட்டனர். இதற்கு எதிராக சில குரல் ஐ.நா. சபையின் புறமிருந்தும் வருகின்றது. அது மிகவும் மெல்லிய குரலாகவே இருக்கின்றது. அவ்வாறு இருந்தாலும் அதற்கு நன்றி.

இது மனித உரிமை மீறலும், தவறும் ஆகும். மேலும் இதனால் ஏராளமான பிரச்சனைகள் உருவாகும். மேலும் இஸ்ரேல் தனது இந்த முடிவைக் குறித்து சிந்திக்க வேண்டும். இது தவறு என்று கடுமையாக கூறுவதற்குப் பகரமாக இன்னும் கோரிக்கையே இவர்கள் வைத்துக் கொண்டிருக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும், போர் புரியாத அந்த அப்பாவிகளின் மீது எந்தக் குற்றமும் இல்லை. உலகம் இஸ்ரேலிய பெண்கள், குழந்தைகள் மற்றும் சாதாரண குடிமக்களை அப்பாவிகளாகக் கருதுகின்றது என்றால் பின்னர் இந்த பாலஸ்தீனியர்களும் அப்பாவிகள் ஆவர். இவ்வாறு கொன்று குவிப்பது ஆகுமானது இல்லை என்றுதான் (யூதர்களாகிய) அந்த வேதம் வழங்கப்பட்ட –வர்களுடைய சொந்த வேதத்தின் போதனையும் கூறுகின்றது. முஸ்லிம்கள் தவறிழைத்து விட்டனர் என்று அவர்கள் மீது ஆட்சேபனை உள்ளது என்றால் பின்னர் இந்த மக்கள் தங்களது நிலையையும் எட்டிப் பார்க்க வேண்டும். எவ்வாறிருப்பினும், நாம் அதிகமாக துஆ செய்வது அவசியம் ஆகும்.

பாலஸ்தீனத்தின் தூதுவர் இங்கு டி.வி–யில் அநேகமாக பி.பி.ஸி–க்கு நேர்காணல் கொடுத்தார். மேலும் கேள்விக்கு பதில் வழங்கும்போது இவ்வாறு கூறினார்: அதாவது ஹமாஸ் ஒரு தீவிரவாத கூட்டம் ஆகும். அது அரசாங்கம் கிடையாது. மேலும் பாலஸ்தீன அரசாங்கத்திற்கு அதனுடன் எந்தத் தொடர்பும் இல்லை. ஆனால் அத்துடன் இந்தக் கேள்வியையும் அவர் எழுப்பியுள்ளார். உண்மையான நீதி நிலைநாட்டப்பட்டிருந்தால் பின்னர் இந்த விஷயங்கள் நிகழ்ந்திருக்காது என்ற அவருடைய இந்தக் கூற்று சரியானதாகும். வல்லரசுகள் தங்கள் இரட்டை அளவுகோலை மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் அல்லது மேற்கொள்ளா விட்டால் பின்னர் இதுபோன்ற அமைதியின்மை

மற்றும் போர்கள் உலகில் நடைபெற முடியாது. எனவே இந்த இரட்டை அளவுகோல்களை நிறுத்தி விட்டீர்கள் என்றால் பின்னர் போர்கள் தாமே முற்றுப் பெற்று விடும்.

இந்த விஷயங்களையே நான் ஒரு நீண்ட காலமாக இஸ்லாத்தின் போதனையின் ஒளியில் கூறிக் கொண்டிருக் –கின்றேன். ஆனால் சரிதான்; சரிதான்! என்று நம் முன்னால் கூறுகின்றனர். ஆனால் செயல்படுவதற்குத் தயாராக இல்லை.

தற்போது அனைத்து வல்லரசுகளும் அல்லது மேற்கத்திய சக்திகளும் நீதியை ஒரு பக்கமாக புறந்தள்ளி விட்டு பாலஸ்தீனியர்களின் மீது கடுமை செய்வதற்காக ஒன்று கூடி வருகின்றனர். மேலும் எல்லாப் புறமிருந்தும் படைகளை அனுப்பி வைப்பதற்கான விஷயங்கள் பேசப்பட்டு வருகின்றன. மேலும் இவ்வாறு அநீதி இழைக்கப்பட்டு வருகின்றது என்று அநீதி இழைக்கப்பட்டவர்களின் படங்கள் காட்டப்படுகின்றன. மேலும் வந்து விடுகின்றன. இஸ்ரேலிய பெண்கள் மற்றும் குழந்தை –களுக்கு இந்த முடிவு ஏற்பட்டு வருகின்றது. அவர்களுக்கு இவ்வாறு மோசமான நிலை ஏற்பட்டு வருகின்றது என்று ஒரு நாள் செய்தி வருகின்றது. ஆனால் அவர்கள் இஸ்ரேலியர்கள் கிடையாது. மாறாக அவர்கள் பாலஸ்தீனியர்களாக இருந்தனர் என்று அடுத்த நாள் தெரிய வருகின்றது. ஆயினும் அவர்களின் மீடியாக்களில் எந்த வருத்தமும் தெரிவிக்கப்படுவதில்லை. மேலும் அவர்களுக்காக அனுதாபத்திற்கான எந்தச் சொற்களும் கூறப்படவில்லை. இந்த மக்கள் தடி வைத்திருப்பவன் தண்டல்காரன் என்ற கூற்றின்படி செயல்படுகின்றனர். எவர்களின் கையில் உலகின் பொருளாதாரம் இருக்கின்றதோ அவர்களுக்கு முன்பே இவர்கள் குனிய வேண்டியது இருக்கின்றது. ஆய்வு செய்யப்பட்டால் பின்னர் வல்லரசுகள் போர்களைத் தணிப்பதற்குப் பகரமாக அவற்றை மூட்டுவதிலேயே ஈடுபட்டு வருகின்றன என்பது தெரிய வரும். இந்த மக்கள் போர் நிறுத்தத்தை விரும்புவதில்லை. முதல் உலகப் போருக்குப் பிறகு போர்களை நிறுத்துவதற்காக வல்லரசுகள் லீக் ஆஃப் நேஷன்ஸ் என்ற அமைப்பை உருவாக்கின. ஆனால் நீதியின் தேட்டங்களை முழுமை செய்யவில்லை. மேலும் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டியதன் காரணமாக இது தோல்வியுற்றது. மேலும் இரண்டாம் உலகப் போர் நிகழ்ந்தது. மேலும் ஏழு கோடிக்கும் அதிகமான உயிர்கள் பலியாகின என்று கூறுகின்றனர்.

தற்போது இதே நிலைதான் ஐ.நா. சபையின் நிலையாக ஆகிக் கொண்டிருக்கின்றது. உலகில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்; அநீதியிழைக்கப்பட்டவர்களுக்கு ஆதரவு கொடுக்கப்பட வேண்டும்; போர்களை முடிவுக்குக் கொண்டு வர முயற்சி செய்யப்பட வேண்டும் என்பதற்காகவே அது உருவாக்கப்பட்டது. ஆனால் இந்த விஷயங்கள் தொலை தூரத்தில் கூட தென்படவில்லை. தனது சுயநலன்களையே ஒவ்வொருவரும் பார்க்கின்றனர். தற்போது இந்த நீதியின்மையின் காரணமாக நிகழப்போகும் இந்தப் போரின் பாதிப்புகளை சாதாரண நபர் கற்பனை செய்து கூட பார்க்க முடியாது. எவ்வளவு கடுமையான இழப்புகள் ஏற்படும்? என்பது வல்லரசுகளுக்கு தெரியும். ஆயினும், அதன் பின்னரும் நீதியை நிலைநாட்டுவதன் பக்கம் எந்த கவனமும் இல்லை. மேலும் கவனமூட்டப்படும் போது எவரும் தயாராகுவதும் கிடையாது. அதுபோன்ற நிலைமைகளில் குறைந்தபட்சம் முஸ்லிம் நாடுகள் விழிப்படைய வேண்டும். தங்களது கருத்து வேறுபாடுகளைக் களைந்து விட்டு தங்களது ஒருமைப்பாட்டை நிலைநாட்ட வேண்டும்.

تَعَالَوْا إِلَىٰ كَلِمَةٍ سَوَاءٍ بَيْنَنَا وَبَيْنَكُمْ

வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்கு –மிடையில் ஒன்றுபட்ட ஒருமித்த அந்தக் கருத்தின் பால் வந்து விடுங்கள். இது அல்லாஹ்வின் இருப்பாகும் (திருக்குர்ஆன் 3:65) என்ற வழிகாட்டலை வேதம் வழங்கப்பட்டவர்களுடன் தொடர்புகளை மேம்படுத்துவதற்காக முஸ்லிம்களுக்கு அல்லாஹ் வழங்கி இருக்கின்றான்.



அவ்வாறிருக்க எந்த முஸ்லிம்களின் கலிமா முற்றிலுமாக ஒன்றாக இருக்கின்றதோ அவர்கள் ஏன் கருத்து வேறுபாடு –களைக் களைந்து விட்டு ஒன்றுபட முடியாது?

எனவே, சிந்தியுங்கள். மேலும் உங்களது ஒருமைப்பாட்டை நிலைநாட்டுங்கள். இதுவே உலகிலிருந்து குழப்பத்தை அகற்றுவதற்கான வழிமுறையாக இருக்க முடியும். பின்னர் ஒன்றுபட்டு நீதியின் தேட்டங்களை முழுமை செய்வதற்காக ஒவ்வோர் இடத்திலும் அநீதியிழைக்கப்பட்டவர்களின் உரிமையை நிலைநாட்டுவதற்காக முழுமையான முறையில் குரல் கொடுக்க வேண்டும். ஒன்றுபட்டால், ஒற்றுமை ஏற்பட்டால் பின்னர் குரலிலும் வலிமை இருக்கும். இல்லையென்றால் அப்பாவி முஸ்லிம்களின் உயிர்கள் பலியாகுவதற்கு இவர்கள் பொறுப்பாளர்களாக இருப்பர். முஸ்லிம் அரசாங்கங்கள் பொறுப்பாளிகளாக இருக்கும்.

மேலும் அநீதியாளருக்கும், அநீதியிழைக்கப்பட்ட –வருக்கும் உதவி செய்யுங்கள் என்ற ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய இந்த வழிகாட்டலை கருத்தில் கொள்ள வேண்டும். இது அதிகாரம் படைத்தவர்களின் பணியாகும். (சஹீஹ் புகாரி, கிதாபுல் மழாலிம் ஹதீஸ் எண்.2443)

எனவே இந்த முக்கியமான விஷயத்தைப் புரியுங்கள். உலகை அழிவில் ஆழ்த்துவதற்குப் பகரமாக உலகை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு முயற்சி செய்வதற்காக முஸ்லிம் அரசாங்கங்களுக்கு அறிவையும், புரிதலையும் அல்லாஹ் வழங்குவானாக. தங்களின் ஆணவத்தின் மகிழ்ச்சியைத் தங்களது நோக்கமாக ஆக்கிக் கொள்ளாமல் இருப்பதற்காகவும் அவர்களுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக.

அழிவு ஏற்பட்டால் பின்னர் இந்த சக்திகள் பாதுகாப்பாக இருக்காது என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். எவ்வாறிருப்பினும் நம்மிடமோ துஆ என்ற ஆயுதமே உள்ளது. அதனை ஒவ்வோர் அஹ்மதியும் முன்னரை விட அதிகமாக

பயன்படுத்த வேண்டும். காஸாவில் சில அஹ்மதி குடும்பங்களும் சூழப்பட்டுள்ளன. அல்லாஹ் அவர்களையும் பாதுகாப்பாக வைப்பானாக. மேலும் அனைத்து அப்பாவி அநீதியிழைக்கப்பட்ட –வர்களையும் அவர்கள் எங்கிருந்தாலும் பாதுகாப்பாக வைப்பானாக.

அல்லாஹ் ஹமாஸிற்கும் அறிவை வழங்குவானாக. மேலும் இந்த மக்கள் தாமே தம்மவர்கள் மீது அநீதியிழைப்பதற்கு பொறுப்பாளிகளாகவும் ஆகக் கூடாது. எவர் மீதும் அநீதியும் இழைக்கக் கூடாது. போர் புரிய வேண்டும் என்றாலும் கூட இஸ்லாமிய போதனைகளுக்கேற்ப என்ன கட்டளை உள்ளதோ அதற்கேற்ப செயல்பட வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் மீதான பகைமை நம்மை நீதியிலிருந்து விலக்குவதற்காக இருக்கக் கூடாது. இதுவே அல்லாஹ்வின் கட்டளையாகும். அல்லாஹ் வல்லரசுகளுக்கும் இந்த பாக்கியத்தை வழங்குவானாக. அதாவது இரு தரப்பிலும் நீதியின் தேட்டங்களை முழுமை செய்தவாறு அமைதியை நிலைநாட்டக் கூடியவர்களாக அவர்கள் திகழட்டுமாக. ஒரு தரப்பின் பக்கமாக சாய்ந்து மற்றொரு பக்கம் உரிமையைப் பறிப்பவர்களாக அவர்கள் இருக்கக் கூடாது. அநீதியிலும், வரம்பு மீறுதலிலும் முன்னேறுபவர்களாக அவர்கள் ஆகக் கூடாது.

உலகில் அமைதியையும், நிம்மதியையும் பார்க்கக் கூடியவர் –களாக நாம் இருப்பதற்கு அல்லாஹ் அருள் செய்வானாக.

---

*(16-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி ...)*

இந்த துஆவிலிருந்தும் ஒரு மனிதனின் பாவங்கள் மன்னிக்கப்படும் நேரமே அவனுக்கு லைலத்துல் கத்ர் ஆகும். அந்த நேரத்தை ரமலான் மாதத்தின் கடைசி பத்தில் ஒற்றை படை இரவுகளில் தேட வேண்டும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்றாலும், இந்த பாவமன்னிப்பிற்கான நேரம் ஒருவரின் வாழ்க்கையில் எப்பொழுது வேண்டுமானாலும் வரலாம் என்பதையும் மறுக்க முடியாது.

பிறகு லைலத்துல் கத்ர் தொடர்பான ஹதீஸில் வருகின்ற, கவனம் செலுத்த வேண்டிய இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அது எந்த இரவு என்பதை கூறுவதற்காக வெளியே வந்த பொழுது இரண்டு முஸ்லிம்கள் சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களை சமாதானப்படுத்துவதற்குள் அந்த இரவு பற்றிய தகவலானது மறக்கடிக்கப்பட்டு விட்டது.

இது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "அதாவது ஹதீஸ்களின் வார்த்தைகளில் இருந்து தெரிய வருவது என்னவென்றால், அன்னார் மறக்கவில்லை; மாறாக இறை நாட்டத்தின் படி அந்த நேரம் பற்றிய நினைவு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆக இந்த சண்டையின் காரணமாக அல்லது கருத்து வேறுபாட்டின் காரணமாக இந்த நேரம் பற்றிய அறிவு எடுத்துக் கொள்ளப்பட்டது. எனவே இனி குறிப்பிட்ட தேதியில்லை. ஆனால், இதை ரமலானின் இறுதிப் பத்தில் ஒற்றைப்படை இரவுகளில் தேடுங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். இதிலிருந்து ஒரு மிக முக்கியமான கருத்தை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். அதாவது எந்த நேரத்தைப் பற்றி லைலத்துல் கத்ர் என்று கூறப்பட்டுள்ளதோ அது சமுதாய ஒற்றுமையோடு தொடர்புடையதாகும்.

இதை எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: இது மிக முக்கியமான கருத்தாகும். எந்த சமுதாயத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் அழிந்து விடுமோ அதிலிருந்து லைலத்துல் கத்ரும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. பல முஸ்லிம் நாடுகளினுடைய துரதிஷ்டத்தினால் அவர்களில் ஒற்றுமை இல்லாமல் போய் விட்டது என்று மிகவும் வருத்தத்துடன் கூற வேண்டியது இருக்கிறது. பொதுமக்கள் பொதுமக்களோடு சண்டை இடுகின்றனர். பொதுமக்கள் அரசாங்கத்தோடும் சண்டை இடுகின்றனர். மேலும் அரசாங்கங்கள் பொதுமக்கள் மீது அநீதி இழைக்கின்றன. ஆக, ஒற்றுமை இல்லாமல் போனதோடு மட்டுமின்றி அநீதியும் இழைக்கப்படுகிறது. பிறகு அந்த அநீதியில் மேலும் அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இந்த ஒற்றுமைக் குறைபாட்டின் காரணமாகவே முஸ்லிம்களுக்கு எதிராக என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற தைரியம் மற்றவர்களுக்குப் பிறக்கின்றது. இந்த காரணத்தினால் தான் இஸ்ரேலும் அநீதியான முறையில் இப்போது அப்பாவி பாலஸ்தீனியர்களைக் கொன்று குவித்து கொண்டே செல்கிறது. முஸ்லிம்களில் ஒற்றுமையும் நல்லிணக்கமும் இருந்து மேலும் இறைவன் கூறிய வழியில் நடந்திருந்தால் முஸ்லிம் நாடுகளுடைய சக்தி எவ்வளவு பெரியது என்றால் இது போன்ற அநீதி நடந்திருக்காது. (குத்பா ஜுமுஆ 25.7.2014)

ஆக, இது அன்னார் கூறி பத்து ஆண்டுகள் ஆகி விட்டன. இன்றளவும் இதே நிலைதான் நிலவுகின்றது. காலத்தின் கலீஃபா இன்றும் தொடர்ந்து முஸ்லிம் நாடுகள் ஒன்றுபடுமாறு வலியுறுத்தி வருகின்றார்கள். அந்தோ! முஹம்மதிய உம்மத் இதைப் புரிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும். அல்லாஹ் இவர்களுக்கு இதற்கான நல் வாய்ப்பை வழங்குவானாக.

**எந்த சமுதாயத்தில் ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் அழிந்து விடுமோ அதிலிருந்து லைலத்துல் கத்ரும் எடுத்துக் கொள்ளப்படுகிறது.**

# வீடுகளை கிப்லாவாக்கிக் கொள்ளுங்கள்!

திருக்குர்ஆனில் 10:88-வது வசனத்தில்,

وَّ اجۡعَلُوۡا بُیُوۡتَکُمۡ قِبۡلَۃً 'வஜ்அலூ புயூத்த(க்)கும் கிப்ல(த்)தன்' இதற்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தும், வேறு ஓரிருவரும், நீங்கள் எல்லாரும் உங்கள் வீடுகளை ஒன்றுக்கொன்று எதிர் எதிராக இருக்குமாறு அமைத்துக் கொள்ளுங்கள் என்று மொழியாக்கம் செய்துள்ளனர்.




ஆங்கிலத்தில், மவ்லவி ஷேர் அலி சாஹிபும், மலிக் குலாம் பரீத் சாஹிபும், ஜஃபருல்லாஹ் கான் சாஹிபும் Make your houses so as to face one another என்று எழுதியுள்ளனர். ஆனால் தமிழ் மொழியிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ள மொழிபெயர்ப்புகளில் ஏறக்குறைய 40 மொழிபெயர்ப்பாளர்கள், அவ்வீடு -களையே தொழுமிடங்களாக ஆக்கிக் கொண்டு தவறாமல் தொழுகையைக் கடைபிடியுங்கள் என்றும், Turn these houses into places of worship, establish prayer என்றும் எழுதியுள்ளனர்.

இதில் வரும் கிப்லா என்ற சொல்லுக்கு இவ்விரு அணியினரும் கொள்ளும் பொருளில்தான் முரண்பாடு காணப்படுகிறது. முதல் அணியினர், உங்கள் வீடுகளை ஒன்றையொன்று எதிர்நோக்கும் வகையில் ஆக்குங்கள். தொழுகையை நிலைநாட்டுங்கள் என்றும். இரண்டாவது அணியினர், அவ்வீடுகளை கிப்லாவாக ஆக்கிக் கொண்டு, தொழுகையை நிலைநாட்டுங்கள் என்றும் எழுதியுள்ளனர்.

இதில் வீடுகளுடன் கிப்லா என்ற சொல்லும், அதனை அடுத்து தொழுகையும் வருவதால், வீடுகளை கிப்லாவாக்கி தொழுங்கள் என்று பொருள் கொண்டதாக நான் நினைக்கிறேன். அப்படியென்றால் வீட்டுக்கு வெளியே நின்று, வீட்டை கிப்லாவாக ஆக்கிக் கொண்டு தொழ வேண்டும் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

இக்கட்டளை மூஸா நபிக்கும் ஹாரூன் நபிக்கும் இறைவன் அனுப்பிய செய்தியாகும். நீங்கள் இருவரும் உங்கள் சமுதாயத்துக்கு வீடுகளை அமைத்துக் கொள்ளுங்கள் என்றும், அவ்வீடுகளை 'கிப்லா' ஆக்குங்கள். அவற்றில் தொழுகையை நடத்துங்கள் என்றும் அவ்வசனத்தில் வருகிறது. இஸ்ரவேல் சமுதாயத்துக்கு என எகிப்து நகரில் பொது தொழுமிடம் 'ஃபிர்அவ்ன்' ஆட்சியில் இல்லை.

எனவே ஒவ்வொருவரும் தம் வீட்டையே தொழும் இடமாக ஆக்கிக் கொண்டு தொழுது வந்தனர். ஆனால், வீடுகளை ஒன்றையொன்று பார்க்குமாறு கட்டிக் கொண்டு அதில் தொழுகையை நடத்துங்கள் என்பதுதான் அதன் பொருளாகும். அவ்வாறு வீடுகளை எதிர் எதிராக ஒன்றையொன்று பார்த்துக் கொள்ளுமாறு கட்டுவதன் நோக்கம், விழிப்புணர்வு இருக்க வேண்டும். ஒவ்வொரு வீடும் எதிர் வீட்டினரின் கண்காணிப்பில் இருக்குமாறு அமைய வேண்டும் என்பதுதான் நோக்கமாகும்.

2:178-வது வசனத்தில், கிழக்கு, மேற்கு ஆகியவற்றினை நோக்கி உங்கள் முகங்களைத் திருப்புதல் (பெரிய) நன்மையன்று.

இதில் வரும் قِبَلَ 'கிபல' என்பதற்கு 'நோக்கி' - கிழக்கை நோக்கி, மேற்கை நோக்கி என்பது பொருளாகும். முஸ்லிம்கள் கஅபத்துல்லாஹ்வை நோக்கி தொழுகை நடத்துகிறார்கள். அவர்களுக்கு அவர்கள் வாழும் இடத்திற்கு ஏற்ப திசைகள் மாறுபடும். சிலருக்கு மேற்குத் திசையும், சிலருக்கு கிழக்குத் திசையும், சிலருக்கு வடக்குத் திசையும், சிலருக்கு தெற்குத் திசையும் நோக்கும் திசைகளாக அமையும்.

10:88-வது வசனத்தில், 'நோக்குதல்' என்பது வீடுகள் எதிர்ப்புறத்திலுள்ள வீடுகளை நோக்கி, ஒன்றையொன்று பார்க்கும் விதத்தில் அமைய வேண்டும் என்பதேயாகும். இதில் வரும் 'கிப்லா' என்பது வீடுகளைக் குறிப்பிட்டு, 'புயூத்தகும் கிப்லத்தன்' என்று வருகிறதே தவிர தொழுகையைக் குறிப்பிட்டு வரவில்லை. அடுத்த வாக்கியம், 'வஅகீமுஸ்ஸலாத்' என்று வருகிறது. இவ்வாறு 'கிப்லா' என்பது வீடுகளுடன் வருகிறதே ஒழிய, தொழுகையுடன் வரவில்லை. இதில் வரும் 'வ' எனும் சொல் வீட்டையும் தொழுகையையும் பிரித்துக் காட்டுகிறது.

அடுத்து அவர்கள், வீடுகளை தொழுமிடமாக ஆக்கிக் கொண்டு என்றும், Turn these house into places worship என்றும் எழுதியுள்ளனர். கிப்லா என்பதற்கு தொழுமிடம் என்று பொருள் கொள்ளலாமா? இதுவும் தவறாகும். கிப்லா என்பதற்கு, Direction, Towards, நோக்கும் திசை என்று பொருளே தவிர தொழுமிடம் என்பது பொருளன்று.

**(A.P.Y. அப்துல் காதிர்)**

Editor: A. Nasir Ahmad | Sub-Editorial: Maulavi M.B. Tahir Ahmad | Design & Layout: A. Abdul Nizar | Manager: A. Samsul Alam